ilakku.org

# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 270 | சனி, ஜனவரி 20, 2024 | 14 பக்கங்கள்


# சீரற்ற கால நிலையால் பெரும் அழிவை சந்தித்த விவசாய நிலங்கள்

ஹஸ்பர் ஏ ஹலீம்



சிறப்புச் செவ்வி

செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

# தமிழரசு தலைமைக்கான தேர்தல் தவிர்க்க முடியாமல் போனது ஏன்?

# கோட்டாவின் பொது மன்னிப்பும் உயர் நீதிமன்றத்தின் அதிரடியும்

அகிலன்

# இந்திய மாலைதீவு மோதல்

# இந்துசமுத்திர பிராந்தியத்தின் பிடியை இழக்கின்றதா இந்தியா

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

# மார்ச் ஜெனிவா அமர்வை எதிர் கொள்ள காய் நகர்த்தும் ரணில்



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் சவால்களை எதிர்கொள்வதற்காக இலங்கை புதிய இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் உட்பட பல நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் எதிர்வரும் அமர்வில் எழக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கான புதிய அணுகுமுறைகளை இலங்கை பின்பற்ற ஆரம்பித்துள்ளது.

அணிசேரா மாநாட்டுக்காக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உகண்டா

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மாவீரர் துயிலும் இல்ல காணியை சுவீகரிக்க இராணுவம் முயற்சி



முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியின் அளவீட்டு பணிகள் பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து இடை நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த காணியினை தனிநபரிடமிருந்து சுவீகரித்து இராணுவத்துக்கு வழங்கும் விதமாய் நில அளவீட்டு பணிகள் வியாழக்கிழமை(18) இடம்பெறவிருந்தது. இந்நிலையில், குறித்த பகுதிக்கு முல்லைத்தீவு நில அளவை திணைக்கள அதிகாரிகள் நில அளவீட்டு பணிகளை மேற்கொள்ள சென்றபோது பிரதேச மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இதனையடுத்து அளவீட்டு பணிகளை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வெள்ள அனர்த்தத்தை குறைக்க பொது மக்களினால் முன்னாயத்த நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப்பகுதிக்குட்பட்ட பாலம் போட்டாறு கிராம சேவகர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தை கட்டுப் படுத்த முற்காப்பு நடவடிக்கை வியாழக்கிழமை(18) மேற் கொள்ளப்பட்டது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்க இடம் பெற்ற குறித்த சிரமதான பணியில் பொது மக்களும் இணைந்து இதில் ஈடுபட்டனர். சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாலம்



போட்டாறு கிராம சேவகர் பிரிவு பாதிக்கப்பட்டிருந்தன.

இதனை எதிர்வரும் காலங்களில் குறைக்கும் நோக்குடன் 120 குடும்பங்களின் நன்மை கருதி பிரதேச செயலாளரின் வேண்டு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இந்திய மாணவர்களுக்கான விசா வழங்குவதை குறைத்தது கனடா

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான இராஜதந்திர விரிசல்களின் எதிரொலியாக இந்திய மாணவர்களுக்கு நுளைவு அனுமதி வழங்குவதை கனடா மிக அதிகளவு குறைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



கடந்த செப்ரம்பர் மாதம் 14,910 மாணவர்களுக்கே கனடா விசா வழங்கியுள்ளது. அதற்கு முன்னைய ஆண்டு 108,940 மாணவர்களுக்கு கனேடிய அரசு நுளைவு அனுமதியை வழங்கியிருந்தது. அதாவது நுளைவு அனுமதி வழங்கப்படுவதில் 86 விகித வீழ்ச்சி கண்டுள்ளது.

கனடாவின் வன்கூவர் பகுதியில் வைத்து கடந்த ஜூன் மாதம் சீக்கியஅமைப்பின்தலைவர்ஒருவர் கொல்லப்பட்டதில் இந்தியாவின் பங்கு உள்ளதாக கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ருடோ நாடாளுமன்றத்தில் தெரிவித்ததை தொடர்ந்து இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான மோதல்கள் ஆரம்பமாகியிருந்தன. இந்தியா

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# செங்கடலில் 72 மணிநேரத்தில் 3 கப்பல்கள் மீது தாக்குதல்

ஏமனின் குதீஸ் அமைப்பினர் அமெரிக்க மற்றும் பிரித்தானியா கப்பல்களை குறிவைத்து தொடர் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். நேற்று முன்தினம் மாலை அமெரிக்காவின் சரக்கு கப்பலும், கிரீஸ் நாட்டின் கப்பலும் தாக்கப்பட்டதை தொடர்ந்து கடந்த புதன்கிழமை(17) மற்றுமொரு அமெரிக்க கப்பல் ஆளில்லாத தாக்குதல் விமானம் மூலம் தாக்கப்பட்டு தீப்பற்றிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.



ஏடன் வளைகுடா பகுதியில் கரையில் இருந்து 60 கடல் மைல் தொலைவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அமெரிக்க நிறுவனத்திற்கு சொந்தமான ஜிங்கொ பிக்காடி என்ற கப்பலே தாக்கப்பட்டுள்ளது. கப்பல் தீப்பிடித்ததாகவும், அது அணைக்கப்பட்டு தற்போது பாதுகாப்பாக நகர்த்தப்படுவதாகவும் பிரித்தானியாவின் கடல் கண்காணிப்பு அமைப்பான யுகேஎம்ரிஓ தெரிவித்துள்ளது.

கடந்த 72 மணிநேரத்தில் தாக்கப்பட்ட 3 ஆவது கப்பல் இது. கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவின் ஜிப்ரல்ரர் ஈகிள் என்ற கப்பல் ஏடன் வளைகுடாவில் இருந்து 100 கடல் மைல்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# செங்கடல் பதற்றம்- 14 பில்லியன் டொலர்கள் இந்திய வர்த்தகம் பாதிப்பு

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா விமானத்தாக்குதல்களை தொடர்ந்து செங்கடல் பகுதியில் குதீஸ் படையினரின் தாக்குதல்கள் மேலும் தீவிரமடைந்துள்ளது. இதனை தடுப்பதற்கான வழிமுறைகளை அமெரிக்கா தலைமையிலான நாடுகள் தேடி வருகின்றன.

இணைந்த நடவடிக்கைக்கு பல நாடுகள் மறுப்பு தெரிவித்து வருகின்றன. உதாரணமாக தாம் இந்த கூட்டணியில் இணையப் போவதில்லை என பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், துருக்கி கடற்படையினர் ஏடன் வளைகுடா மற்றும் சோமாலியா கடற்கரைகளில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபடுவதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்



கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே இந்தியாவின் கடற்படை கப்பல்களும் பாராசீக வளைகுடா, சோமாலியா கடல் பகுதி மற்றும் ஏடன் வளைகுடா பகுதிகளில் ரோந்து பணிகளில் ஈடுபட்டு இந்திய கப்பல்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபடப் போவதாக இந்திய கடற்படையின் கட்டளை அதிகாரி வைஸ் அட்மிரல் குர்சரன் சிங் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# வலுக்கும் பாக்கிஸ்தான் – ஈரான் மோதல் இறைமையை மீறி தாக்குதல்கள்



பாகிஸ்தானில் உள்ள பலோச் ஆயுதக் குழுவினர் மீது ஈரான் கடந்த செவ்வாய்க்கிழமை(16) இரவு மேற்கொண்ட நீண்டதூர ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானின் விமானங்கள் ஈரானின் எல்லைக்குள் புகுந்து அதே தீவிரவாத அமைப்பின் ஈரானில் உள்ள முகாம்கள் மீது வியாழக்கிழமை(18) காலை தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது அந்த பிராந்தியத்தில் மேலும் பதற்றங்களை தோற்றுவித்துள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து ஈரான் தனது பலிஸ்ரிக் ஏவுகணைகளை ஏவுதளங்களுக்கு நகர்த்தியுள்ளதாகவும், ஆட்டிலறி பீரங்கிகளை பாகிஸ்தானின் எல்லைப் பகுதியான சரவன் பகுதிக்கு நகர்த்தியுள்ளதாகவும் அந்த பகுதி தகவல்கள் கூறுகின்றன.

இந்த தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் முதல் தடவையாக சீனாவின் அதி நவீன ஜேஎப்-17 பயன்படுத்தியுள்ளது

மற்றும் அமெரிக்காவின் எப்-16 விமானங்களும் இந்த தாக்குதலில் இணைந்து கொண்டுள்ளன. சீனாவின் ஜே-10 ரக விமானம் வான் எதிர்ப்பு தாக்குதல்கள் மற்றும் ஈரானின் ரடார்களின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# முன்னாள் ஜனாதிபதியும் அதற்கு துணை நின்றவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

சட்டத்தை மீறியமைக்கு உச்சபட்ச தண்டனையை பெற்றுக் கொடுத்தால் மட்டுமே தீர்ப்பு முழுமையடையும் என சமூக நீதிக்கான செயற் பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பா ளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.




அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச தமது அதிகாரத்தை பயன்படுத்தி கொலை வழக்கொன்றில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு தூக்குத் தண்டனை கைதியாக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை சட்டத்திற்கு முரணான வகையில் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்தமையை இரத்து செய்து குற்றவாளிக்கு தண்டனையை நிறை வேற்றுமாறு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இலங்கை வரலாற்றில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக அடையாளப்படுத்தப்படும்.

குறுகிய அரசியல் காரணங்களுக்காக அதிகார துஷ்பிரயோகம் செய்த முன்னாள் ஜனாதிபதியும் அதற்கு துணை நின்றவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். உரிய தண்டனை தீர்ப்பளிக்கப்பட வேண்டும். அதுவே ஜனநாயக நாட்டில் மக்களின் எதிர் பார்ப்பாகும்.

முன்னாள் ஜனாதிபதிகள் கட்சி அரசியலை பலப்படுத்துவதற்காகவும், குடும்ப அரசியலை நிலைப்படுத்துவதற்காகவும், அரச சொத்துக்களையும், வளங்களையும் தமக்கும், தம்முடையவர்களுக்கும் பகிர்ந்து கொள்ளவும் அதிகாரத்தை ஊழல் நிறைந்த தாக்கி சட்டத்தை கையில் எடுத்து செயற் பட்டுள்ளனர் என்பது மக்கள் அறிந்த உண்மை. அத்தோடு சட்டத்தை மீறுவதற்கும் ஊழலில் ஈடுபடுவதற்கும் இடமளித்து தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றி கொண்டுள்ளனர்.

அத்தோடு 2019-2022 ஆம் ஆண்டில் முறையற்ற பொருளாதார கொள்கை வகுத்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சேர்த்துள்ளனர் என்பதை கடந்த வருடம் நீதிமன்ற தீர்ப்பு வெளிப்படுத்தியது. அத்தீர்ப்பு மக்கள் தீர்ப்பாகும் நிலையிலேயே தற்போதைய நீதிமன்ற தீர்ப்பு வெளிவந்துள்ளது. இது கோத்தாபய மற்றும் அவரின் சகாக்களின் இன்னொரு முகத்தை சுட்டி நிற்கின்றது.

தூக்குத்தண்டனை கைதியான துமிந்த சில்வா விற்கு பொது மன்னிப்பு கொடுக்கும் அளவிற்கு சட்டத்தை மீறி செயல்படுவதற்கு முன்னால் ஜனாதி பதிக்கு எங்கிருந்து துணிவு வந்தது? இவ்வாறான ஒரு முடிவெடுப்பதற்கு காரணம் அவரது குடும்பமா? அல்லது அவருக்குத் துணை நின்ற அரசியல் கட்சியா? அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களா? இல்லை எனில் வேறு ஒரு அழுத்த சக்தியா என்பது கண்டறியப்படலும் வேண்டும். அந்த அளவுக்கு துமிந்த சில்வா யாருக்கு? எந்த சக்திக்கு? தேவையான ஒருவராக இருந்தார்? என்பதும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

இத்தகைய பின்னணியில் "கோத்தாபய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

இலக்கு

# இறைமை ஒடுக்கப்படுகையில் தீர்வு எப்படிச் சாத்தியமாகும்?

கொழும்பு பண்டாரநாயக்கா அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் 125வது ஆண்டு விழாவை "ஓர் இலங்கையின் உரையாடல்' (one Sri Lanka Dialogue ) என்ற தலைப்பிலான அரங்கமாக மாற்றி அதற்கு சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா தானே தலைமையேற்று 08.01.2024 இல் உரையாற்றுகையில் 'யுத்தத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் 2025ம் ஆண்டாகும் போது தீர்வு வழங்கப்படும். இடம்பெயர்ந்தோர் மற்றும் காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் ரீதியான தீர்வுகள் காணப்படும் என்று அறிவித்துள்ளார். இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் ஈழத்தமிழரின் பாதுகாப்பான அமைதியான வளர்ச்சிகளுடனான வாழ்வைப் பேணுவதற்கு அவர்கள் தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் இறைமையை மீள்கட்டமைவு செய்வதன் மூலம் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினை என்பது மறைக்கப்பட்டு யுத்தம் தொடர்பான பிரச்சினைகள் உள்ள வடக்கு சமுதாய கிழக்கு சமுதாயப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் தீர்வுகள் உதவ வேண்டும் என்பதே ரணிலின் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை குறித்த புதிய விளக்கம். இடம்பெயர்ந்தவர்கள் இனத்துடைப்பு நோக்கில் வெளியேற்றப்பட்டார்கள். வலிந்து காணாமலாக்கப்பட்டோர் இனஅழிப்பின் பின்னணியில் பிரச்சினைக்குள்ளாகியுள்ளனர் என்ற உண்மைகளை ரணில் அப்படியே ஒதுக்கி வைத்து விட்டு கோத்தபாய பாணியில் போரின் விளைவுகள் என்று அனைத்தையும் முடிவுக்கு கொண்டு வரும் நடைமுறையில் இறங்கியுள்ளதை இவ்வுரை தெளிவாக்குகின்றது.

அதே வேளை ஜனாதிபதி செயலக வளாகத்தில் நடைபெற்ற இலங்கைத் தேசிய காங்கிரசை 1919 இல் தோற்றுவித்து பிரித்தானிய காலனித்துவத்திடம் இருந்து இலங்கை விடுதலை பெறுவதற்கான முதல் அரசியல் இயக்கமாக அதனை நெறிப்படுத்திய சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்று உரை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா "சுதந்திரமான தேசத்தைக் கட்டியெழுப்ப சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் 'இலங்கையர்' என்ற எண்ணக்கருவை ' இலங்கையரின் தேவைகள்' என்ற வகையில் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். அந்த வேலைத்திட்டத்தை பலப்படுத்தும் வகையில் யுத்தம் சார்ந்த பிரச்சினைகள் அனைத்துக்கும் 2025 க்குள் தீர்வு காண எதிர்பார்க்கின்றோம். சேர். பொன்னம்பலம் அருணாசலம் தமிழ் சிங்கள முஸ்லீம் என்று அல்லாமல் இலங்கையர் என்ற எண்ணக்கரு தொடர்பில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். அந்தக் கொள்கையைப் பின்பற்றிய டி. எஸ். சேனநாயக்கா அனைத்து இனத்தவரையும் மதத்தவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு வழி வகுத்தார்' என்று தன்னுடைய "ஓர் இலங்கையர் உரையாடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா சேர். பொன்னம்பலம் அருணாசலத்தைத் துணைக்கு அழைத்துள்ளார். ஆனால் அதே சேர் பொன்னம்பலம் அருணாசலம் தான் இரண்டு ஆண்டுகளில் 1921 இல் முதன் முதலில் சிங்களவர்களவர்களிலிருந்து விலகி ஈழத்தமிழர்களுக்கான இலங்கைத் தமிழர் லீக் என்ற முதல் அரசியல் கட்சியை நிறுவி ஈழத்தமிழர்களுக்கான தன்னாட்சி உரிமையையும் கேட்டார் ஆயினும் இரண்டு ஆண்டுகளில் அவர் காலமான துயர வரலாறு பதிவாகியதென்ற உண்மையை அப்படியே ரணில் முழுங்கி விட்டார். ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்க முன்னெடுக்கும் ஓர் இலங்கையர் என்ற ரணிலின் உரையாடலை நூற்றிமூன்று ஆண்டுகளுக்கு முன்பே சேர். பொன்னம்பலம் அருணாசலம் தீர்க்கதரிசனமாக எதிர்த்துள்ளார் என்பதை இலக்கு உலகுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறது.

தற்போது சிறிலங்கா ஜனாதிபதி இரண்டு வழிகள் மூலம் ஈழத்தமிழர்களின் இறைமையை மேலும் ஒடுக்க வேகமாக முயல்கின்றார். 01. பொருளாதார மீண்டெழலுக்கு என ஈழத்தமிழர்களின் தாயகத்தின் நிலவளம் கடல் வளம் இயற்கை வளம் மூன்றையும் சிறிலங்காப் படைகளுக்கான பொருளாதார வாழ்வாதாரங்களாக்கி ஈழத்தமிழர்களை மண்ணை விட்டு வெளியேற வைத்து அவர்களின் இறைமையை ஒடுக்குவதுடன் பாதுகாப்புச் செலவீனங்களை குறைத்துள்ளேன் என அனைத்துலக நாணயநிதியத்தையும் திருப்திப்படுத்தல். 02. இந்தியா சீனா அமெரிக்கா உட்பட்ட உலக நாடுகளுக்கு ஈழத்தமிழர் தாயகப் பகுதிகளை விவசாயம் கடல்வளம் மீளுற்பத்தி செய்யக் கூடிய எரிசக்திகள், பாகம் பொருத்துதலை குறைந்த கூலியில் செய்விக்கும் வேலைத்தளங்கள், சுற்றுலாத்துறை, தனியார் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றுக்கான முதலீடுகளுக்காகத் திறந்து விடுதலுடன் ஆள்நிலைப்பட்ட உலக நாட்டவர்களையும் அங்கு நிலைப்படுத்தி குறுகிய நீண்டகாலப் போக்கில் ஈழத்தமிழர்களின் தாயக வளங்களை அவர்கள் விரும்பியவாறு சுரண்ட அனுமதித்து, பிறநாடுகளினதும் அனைத்துலக தனியார் பெருமுதலாளிகளதும் காலனித்துவ பூமியாக மாற்றி அவற்றின் இலாபத்தை ஈழத்தவர்கள் அடையாதவாறு முதலிட்டவர்களே பெறவைத்து ஈழத்தமிழர்களை நிரந்தரமான உலகச் சந்தைக் கூலிகளாக மாற்றுவது. இதற்கான சட்டகமே ஓர் இலங்கையர் உரையாடல். இந்த தனது திட்டத்திற்கு ஆதரவினை மேலும் கூட்டவே தைவான் மக்களின் தெளிவான தேர்தல் முடிவுக்குப் பின்னரும் ரணிலின் அமைச்சர்களும் சபாநாயகரும் சிறிலங்கா ஓர் சீனாக் கொள்கைக்கே இன்றும் ஆதரவு எனப் பகிரங்கமாக அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டைச் சீனத்தூதுவருக்குக் கூறி சீனாவை சிறிலங்காவுக்கு உதவ உற்சாகப்படுத்தி வருகின்றனர். அமெரிக்காவைத் திருப்திப்படுத்தச் செங்கடலுக்கு சிறிலங்காக் கடற்படைக்கப்பல்கள் இரண்டை அனுப்பச் சிறிலங்கா ஜனாதிபதி தன்னிச்சையாகவே முடிவெடுத்து இஸ்ரேலிய அமெரிக்க மேற்குலக அணிகளின் செலவில் சிறிலங்கா கடற்படைக்கு நவீன ஆயுதங்களையும் கருவிகளையும் இணைத்து, முஸ்லீம் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் நிலை ஏற்பட்டால் தனது அரசைப் பாதுகாக்க ஒரு கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்த முயல்கிறார். இந்தியாவுக்கு அதனுடனும் தான் ஒத்துழைப்பதாகக் காட்டவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் மனித உரிமைகள் தொடர்பான தலையீட்டை நீக்குவதற்கான முயற்சியாகவும் ரணில் 'உண்மை ஒருமைப்பாடு நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழச் சட்டமூலத்தைக்' கொண்டுவந்துள்ள போதிலும் எடுத்த எடுப்பிலேயே சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு இதில் நம்பகத்தன்மையில்லை என கருத்து வெளியிட்டுள்ளமை உலகை ரணிலால் இலகுவில் ஏமாற்ற முடியாது என்பதற்கான சான்றாக மாறியுள்ளது. அத்துடன் ஆண்டின் தொடக்கத்திலேயே மக்களின் நாளாந்த உயிர்வாழ்தலுக்கான பொருட்களின் விலை அதிகரிப்பு பணவீக்கத்தை ரணிலின் அரசாங்கம் கட்டுப்படுத்துவதில் செயலிழக்கும் என்ற கருத்தையே உலக பொருளாதார ஆய்வுகள் வெளியிடுகின்றன. இவ்வாறு இலங்கையில் சமுக பொருளாதார அரசியல் நெருக்கடிகள் வருகின்ற போதெல்லாம் தேர்தலை அறவித்துச் சிங்கள பௌத்த பேரினவாதத்தை வெறி கொண்டெழவைத்துத் தமிழர்களின் சேமிப்புக்களையும் சொத்துக்களையும் தேர்தலின் பின்னர் கொள்ளையடித்துச் சிங்கள காடையர்கள் வாழ அனுமதிப்பதும் சிங்கள அரசுக்களின் ஒருவகை அரசியல் தந்திரம். இந்த அபாயத்தைத் தடுப்பதற்கு தாயகத்திலும் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் தங்களுக்கான உறவுப்பாலத்தை கூட்டொருங்குச் செயற்திட்டங்கள் மூலம் உருவாக்குவதே ஒரேவழி என்பதை வலியுறுத்திக் கூறும் இலக்கு "இறைமை ஒடுக்கப்படுகையில் தீர்வுகள் எவ்வாறு சாத்தியமாகும்" என்பதையும் அனைத்துலக சமுகத்திடம் ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து கேட்க வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**

# கோட்டாவின் பொது மன்னிப்பும் உயர் நீதிமன்றத்தின் அதிரடியும்

அகிலன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த டி சில்வாவிற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு தவறானது என உயர் நீதிமன்றம் இந்த வாரம் தீர்ப்பளித்திருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி சட்ட விரோதமான முறையில் செயல்பட்டுள்ளார் என்பதை இச்சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் பொது மன்னிப்பை ரத்து செய்த உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒன்று.



ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பை உயர் நீதிமன்றம் ரத்து செய்திருப்பது இதுதான் முதல் முறை.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவைப் படுகொலை செய்த வழக்கிலேயே துமிந்த சில்வாவிற்கு மரண தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இருந்தபோதிலும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த போது தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார். அந்தப் பொது மன்னிப்பு அன்று முதல் சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்தது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருனிக்கா அதற்கு எதிராக மனு ஒன்றையும் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொது மன்னிப்பு தவறானது என புதன்கிழமை தீர்ப்பளித்திருக்கின்றது.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி ஒருவர் வழங்கிய பொது மன்னிப்பு நீதிமன்றத்தினால் ரத்துச் செய்யப்பட்டு இருப்பது இதுவே முதல் தடவை என்பதால், இது தொடர்பில் ஊடகங்களின் கவனம் திரும்பியுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ இப்போதும் பதவியில் இருந்திருப்பாராக இருந்தால் இவ்வாறான ஒரு தீர்ப்பு வந்திருக்குமா என்ற ஒரு கேள்வியும் இருக்கத்தான் செய்கின்றது. ஏனென்றால் நீதித்துறை அந்த அளவுக்கு அரசியல் மையப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது.

துமிந்த சில்வாவும் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரமும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள். அதாவது இருவருமே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கிய உறுப்பினர்கள். 2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எட்டாம் திகதி இருவரது ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சமரின்போது பாரத லட்சுமணன் பிரேமசந்திர நடுவீதியில் வைத்துக் கொல்லப்பட்டார். பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவுடன் அவருடைய மூன்று மெய்ப் பாதுகாவலர்களும் இந்த துப்பாக்கிச் சமரின்போது பலியானார்கள்.

இருவரும் தமது ஆதரவாளர்கள் சகிதம் வீதியில் நேருக்கு நேர் சந்தித்தபோது உருவாகிய முரண்பாட்டை தொடர்ந்து இந்த துப்பாக்கி சமர் மூண்டது.

இரண்டு பேரும் கொழும்பு மாநகர சபையின் குறிப்பிட்ட பகுதியை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக நீண்ட காலமாகவே முரண்பட்டுக் கொண்டிருந்தவர்கள். இந்த சம்பவத்தில் துமிந்த சில்வாவும் காயம் அடைந்திருந்தார். கொழும்பிலும் பின்னர் சிங்கப்பூரிலும் அவர் சிகிச்சை பெற்றார்.

வழக்கு விசாரணைகளை தொடர்ந்து துமிந்தவுக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அவரைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் ராஜபக்ஷக்கள் அக்கறை காட்டியதாக ஒரு குற்றச்சாட்டும் இருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் துமிந்தவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. நாட்டினுடைய நலன் கருதி இந்த பொது மன்னிப்பை தான் வழங்கியதாக கோட்டாபாய ராஜபக்ஷ சத்திய கடுதாசி ஒன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறு அவர் குறிப்பிட்டு இருந்த தேசத்தின் பாதுகாப்பு அல்லது தேசத்தின் நலன் என்பது என்ன என்பதையிட்டு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் இப்பொழுது சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. அது தொடர்பான எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் ஜனாதிபதி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதனை விட பொது மன்னிப்பு தொடர்பான சட்டமா அதிபரின் வழிகாட்டல்கள் எதையும் முன்னாள் ஜனாதிபதி பின்பற்றி இருக்கவில்லை என்பதும் தெரியவந்திருக்கின்றது.

2021 ஜனவரியில் இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அதனை அடுத்து வந்த ஒரு மாத காலத்திற்கு அந்த பொது மன்னிப்பை எதிர்த்து அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் பலவும் தாக்கல் செய்யப்பட்டன. அதற்குப் பின்னர் சுமார் ஒன்றரை வருடங்கள் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்திருக்கின்றார். இருந்த போதிலும் இந்த மனுக்களை எதிர்கொள்ளத் தேவையாக இருந்த ஆவணங்களை அல்லது கோவைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான எந்த ஒரு செயற்பாட்டையும் ஜனாதிபதியோ ஜனாதிபதியின் செயலகமோ மேற்கொண்டிருக்கவில்லை.

அதிகாரத்தில் தான் இருப்பதால் இதற்கு எதிராக வரக்கூடிய எந்த ஒரு நிலைமைகளையும் தன்னால் சமாளிக்க கூடியதாக இருக்கும் என ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய நினைத்திருக்கலாம்.

அதே வேளையில் பொது ஜன பெரமுனவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் 117 பேர் கையொப்பமிட்ட மனு ஒன்றும் பொது மன்னிப்பு அறிவிப்பு வெளிவர முன்னர் கோட்டாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதிலும் துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அவரது கட்சியைச் சார்ந்தவர்கள் தங்களுடைய அரசியல் அல்லது வியாபார நலன்களுக்காக இந்த மனுவை சமர்ப்பித்திருக்க முடியும்.

ஆனால் ஜனாதிபதி தன்னுடைய நிறைவேற்று அதிகாரங்களின் கீழ்வரகூடிய பொது மன்னிப்பை வழங்குவதற்கான அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருக்கின்றார் என்பதும் இந்த நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அம்பலமாகி யிருக்கின்றது.

அதி உயர் பதவியில் இருப்பவர்கள் தங்களுடைய உறவினர்களையும் அரசியலுக்கு தமக்குத் தேவையாக இருப்பவர்களையும் பாதுகாப்பதற்கு அதிகாரத்தை பயன்படுத்துவது என்பது இலங்கையை பொறுத்தவரையில் புதிதல்ல. அதாவது வர்த்தகப் பிரமுகர்களையும் பாதாள உலகை சார்ந்தவர்களையும் பாதுகாப்பதற்கு அதிகாரத்தில் இருப்பவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வது இலங்கை வரலாற்றில் வழமையான ஒன்றுதான்.

சட்டம் எப்போதும் கண்களை மூடிக் கொண்டு சும்மா இருந்து விடும் என அதிகாரத்தில் இருப்பவர்கள் எண்ணிக் கொண்டு இருந்து விட முடியாது என்பதை தான் இந்த நீதிமன்ற தீர்ப்பு உணர்த்தி இருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷாவினால் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி விடுதலை செய்யப்பட்ட மற்றும் ஒரு விவகாரமும் சர்ச்சைக்கு உள்ளானதாக இருக்கின்றது.



யாழ்ப்பாணத்தில் உள்ள மிருசுவில் பகுதியில் எட்டு பொதுமக்களை படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரியான சுனில் ரட்னாயக்கவுக்கு நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியிருந்தது. இருந்தபோதிலும் அவரையும் கோடாபாய் ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார்.

சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு இருக்கக்கூடிய செல்வாக்கை மேலும் அதிகரித்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டே தமிழ் மக்கள் எட்டு பேரை படுகொலை செய்ததற்காக நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்திருந்தார். அந்தப் பொது மன்னிப்பு கூட மனித உரிமைகள் அமைப்புகள் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இதற்கு எதிரான மனுக்களும் உயர் நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றன. இது குறித்த விசாரணைகளும் இப்போது இடம் பெற்று வருகின்றது. கோடபாய வழங்கிய ஒரு பொது மன்னிப்பு தவறானது என்பதை நீதிமன்றம் அடையாளம் காட்டி இருக்கும் நிலையில் இந்த இரண்டாவது பொது மன்னிப்பும் தவறானது என்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்துமா?

• • •

# சீரற்ற கால நிலையால் பெரும் அழிவை சந்தித்த விவசாய நிலங்கள்

ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கை நாட்டில் ஏற்பட்ட அண்மைய சீரற்ற காலநிலை காரணமாக விவசாய நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை போன்ற மாவட்டங்களில் செய்கை பண்ணப்பட்ட நெற் செய்கை பெரிதும் அழி வடைந்தது. கனமழை,குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாதும் வேளாண்மை செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



பல்வேறு கஷ்டங்களுடன் விதைத்த நெற் செய்கையானது வெள்ள நீரில் மூழ்கியதுடன் எந்த வித இலாபமும் இன்றி நஷ்டத்தையும் எதிர் நோக்கியதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

பெரும் போக செய்கையில் தற்போது அறுவடை இடம் பெற்று வரும் நிலையில் விளைச்சல் குறைவாகவும் உள்ளதாக தெரிவிக் கின்றனர். ஒரு ஏக்கருக்கு பத்து மூடைகளுக்குள் உட்பட்ட விளைச்சல் தான் கிடைக்கப் பெற்றுள் ளதாகவும் இயந்திர வெட்டுக் கூலியாக ஒரு ஏக்கருக்கு 15000 ரூபா வீதம் செலவாகிறது எனவும் இதனால் தாங்கள் கஷ்டப்பட்டு மனைவி பிள்ளைகளின் நகைகளை அடகு வைத்து செய்கையில் ஈடுபட்ட போதும் பெரும் நஷ்டவாளியாக மாறியுள்ளதாகவும் தெரிவிக் கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் கிண் ணியா, தம்பலகாமம், குச்சவெளி, மொறவெவ, கந்தளாய்,சேருவில உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் பெரும் போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் வெள்ள அனர்த் தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. கிருமி நாசினிகளின் விலை அதிகரிப்பு,நோய் தாக்கம் போன்ற காரணங்களால் விளைச்சலில் குறைவும் காணப்படுகிறது.தற்போது ஒரு மூடை நெல்லின் விலை 6000 ரூபா வரை செல்கிறது. வயலை ஆரம்பமாக உழுதுதல் முதல் வெட்டுக்கூலி பசளை போன்ற பல செலவுகள் போக கையில் முதலீடு செய்யப்பட்ட பணம் கூட கிடைக்கவில்லை என பெரும்போக அறுவடையில் ஈடுபட்டவர்கள் கவலை வெளியிடுகின்றனர். இதனால் அரசாங்கம் தங்களுக்கான நஷ்ட ஈடுகளை பெற்றுத் தருமாறும் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 121500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் திருகோணமலை மாவட்டத்தில் 49500ஹெக்டேயர் பரப்பிலும்,மட்டக்களப்பு மாவட்டத்தில் 75200 ஹெக்டேயரிலும், அம்பாறை மாவட்டத்தில் 6800ஏக்கரிலும் செய்கை மேற்கொள்ளப்பட்டது எனவும் வெள்ள நிலமை காரணமாக சுமார் 50வீதமான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மாகாண விவசாய பணிப்பாளர் தெரிவித்தார்.

மகாவலி கங்கை,சேனாநாயக்க சமுத்திரம், கந்தளாய் குளம் போன்றவற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் பாரிய வெள்ள நிலமை காரணமாக நெற் செய்கை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இப் பாதிப்பு தொடர்பில் கிண்ணியா சோளவெட்டுவான் விவசாயி ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார் "இம் முறை செய்த வேளா ண்மை பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது சொந்தமாக 23 ஏக்கரில் நெற் செய்கை மேற் கொண்டுள்ளேன். வெள்ளம் காரணமாக அப் படியே நீரில் மூழ்கியுள்ளது எங்களுக்கு அரசாங்கம் தான் நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தரவேண்டும்" என்றார்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கண்டக்காடு, மயிலப்பஞ் சேனை,சோலை வெட்டுவான் முதலான இடங்க ளில் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் தொடர்ச்சியாக நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் சுமார் 250 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் இம்முறை பெரும் போக வேளாண்மை பயிர் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பராக்கிரமபாகு சமுத்திரம், மகாவலி, கந்தளாய்க்குளம் முதலான பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பல ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இவ்வாறு வெள்ள நீரினால் மூழ்கிய பகுதிகளில் ஒன்றான கிண்ணியா பரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட கண்டக்காடு, சோலை வெட்டுவான் முதலான இடங்களில் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களே இவ்வாறு நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன

இதனால் கடன்பட்டு,கஷ்டப்பட்டு செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் நீரில் மூழ்கி உள்ளதனால் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கி உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



விவசாயிகள் பாரிய நஷ்டத்தை இம் முறை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் எதிர்வருகின்ற சிறுபோகத்துக்கான பசளைகள் கிருமி நாசினி வகைகளை குறைந்த விலையில் தரமாக வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். நெற் செய்கையின் போது ஏற்படும் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த கிருமி நாசினிகளை பாவித்தாலும் அதில் பயனில்லை. தரமற்ற உற்பத்தியாக காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். ஒரு வகை மஞ்சல் நோய் தாக்கம் காரணமாக விளைச்சலின் குறைவை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான நோய் தாக்கம் தொடர்பில் விவசாய திணைக்களம் ஊடாக தம்பலகாமம் பிரதேச விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் விவசாயிகள் அதன் மூலம் வெற்றி கொள்ளவில்லை. எப்படியாக இருந்தாலும் கடந்த முறை அரசாங்கம் மானியம் தருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகளிடத்தில் கூறிய போதும் மானியம் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

விவசாய அழிவின் தாக்கம் தொடர்பில் தம்பலகாமம் பத்தினிபுர விவசாயி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார் "கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு இரண்டு மூடைகள் கூட கிடைக்காத விளைச்சல் தான் இதனால் நஷ்டமடைந்துள்ளோம். வெட்டு கூலி ஏனைய எண்ணெய் வாங்கிய கடனை கொடுத்து விட்டால் கையில் ஒன்றும் மிஞ்சப்போவதில்லை" என்றார்.

திருகோணமலை மாவட்டத்தின் பரம்பரை தொழிலாக விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குளங்களை நம்பியும் சிறு போக பெரும் போக நெற் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். அதிகளவான விவசாய நிலங்கள் இம் முறை பெரும் அழிவை சந்தித்துள்ளதால் கடன் பட்டு செய்த விவசாய பூமி அழிவடைந்துள்ளது வெள்ள நீரின் அதிகளவான தாக்கம் கனமழை உள்ளிட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக



மிக மோசமான பாதிப்புக்களை வேளாண்மை செய்கையாளர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பங்கு வகிப்பது விவசாய செய்கையும் காணப்படுகிறது. விவசாயிகளுக்கு அவர்களை ஊக்கப்படுத்தக்கூடிய வழி வகைகளை செய்து அரசாங்கம் புதியதொரு திட்டம் ஊடாக மாற்று வழி வகைக்குள் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக் கப்பட வேண்டும்.

பல வயல் நிலங்களுக்கு ஊடாக நீர் சென்றடையக்கூடிய குளங்கள் மூலமான வாய்க்கால்களை அபிவிருத்தி செய்து பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்க உரிய அரச துறை அதிகாரிகள் முன்வர வேண்டும். நெல்லுக்கான நிர்ணய விலையை பெற்றுக் கொடுக்கவும் தரமான பசளை கிருமி நாசினிகளை வழங்கவும் வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கைகளாக காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்ட ஈடுகளை துரித கதியில் வழங்கவும் வழி சமைத்துக் கொடுக்க முன் வரவேண்டும் என்பதே ஒட்டு மொத்த விவசாயிக ளின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •

# தமிழரசு தலைமைக்கான தேர்தல் தவிர்க்க முடியாமல் போனது ஏன்?



**தமிழரசுக் கட்சியின் தலைமை பதவிக்கான தேர்தல் சூடு பிடித்த நிலைமையில், இந்தப் பதவியின் முக்கியத்துவம் என்ன, இதற்கான தேர்தலை ஏன் தவிர்க்க முடியாமல் போனது, பதவிக்கு வரப்போபவர் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பன போன்ற கேள்விகளுடன் அரசியல் ஆய்வாளரும் பொருளாதார நிபுணரமான செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை லண்டன் உயிரோடு தமிழின் தாயாக களம் நிகழ்வுக்கு வழங்கிய நேர்காணலில் இருந்து முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காக தருகின்றோம்.**

## செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

**தமிழரசு கட்சியின் தலைமைப் பதவிக்கு நடைபெறுகின்ற இந்த தேர்தல் தமிழ் அரசியல் பரப்பில் முக்கியத்துவம் பெற்றதாக பேசப்படுவதற்கு காரணம் என்ன?**

வெறுமனே ஒரு அரசியல் கட்சியாக தமிழரசு கட்சியை பார்ப்பதற்கும் தற்போதைய ஒரு தேக்க நிலையில் இதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக எங்களுக்கு ஒரு அங்கீகரிக்கப்பட்ட தலைமைத்துவத்தை தேடுகின்ற நிலைமையிலும் தமிழரசு கட்சி என்ற பாரம்பரியம் எங்களுக்கு தேவையாக இருக்கின்றது.

ஏனென்றால் தமிழரசு கட்சி மட்டும் தான் இன்று நம்மிடம் தமிழர்களின் தேசிய அபிலசைகளுக்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பணித்து செயல்பட்ட கட்சியாக இருக்கின்றது. இது முதலாவது காரணம்.

அகில இலங்கை தமிழ் காங்கிரசையும் இவ்வாறு குறிப்பிடலாம் என்றாலும் கூட அந்த கட்சி ஒரு குடும்ப கட்சியாக தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தமிழரசு கட்சி தான் சரியான ஒரு மக்கள் கட்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. கடந்த பத்து வருட காலமாக மாற்றங்கள் இடம் பெறாவிட்டாலும் கூட ஒரு மக்கள் கட்சி என்ற பரிமாணம் தமிழரசு கட்சிக்கு தான் இருக்கின்றது. ஏனைய கட்சிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தாம் ஒரு இயக்கமா கட்சியா என்ற நிலைமையில் வேறுபடுத்த முடியாமல் இருக்கின்றார்கள்

இந்த இடத்தில் தமிழரசு கட்சி ஒன்று தான் எமக்கு ஒரு அரசியல் நிறுவனமாக இருக்கின்ற படியால் அந்த கட்சிக்கு தலைவராக வர வேண்டியவர் எப்படி இருக்க வேண்டும், எதிர்கால அரசியலில் எவ்வாறான பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்களுக்கு கணிசமான கரிசனை உள்ளது. அதனை சாதாரணமாக தமிழரசு கட்சியின் தலைவர்களும் உறுப்பினர்களும் புறந்தள்ளி விட முடியாது. அவர்கள் தாங்கள் தான் தமிழரசு கட்சி, தாங்கள் தான் தீர்மானிப்போம் என செயல்பட முடியாது. தமிழரசு கட்சி தலைமை பதவிக்கான தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறையாக இருப்பதற்கு இதுதான் பிரதான காரணம்.

இவ்வாறு தலைமை பதவிக்கு வரப் போபவர்தான் எதிர்காலத்தில் கட்சி எந்த திசையில் செல்ல போகின்றது என்பதற்கான தீர்மானத்தை எடுக்க கூடியவர். அந்த விஷயத்தில் நாம் கவனமாக அதனை அணுக வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**இந்த தலைமை பதவிக்கான போட்டி ஒன்று தவிர்க்க முடியாமல் உருவாகியிருப்பது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

இது தவிர்க்க முடியாத போட்டி என்று சொல்லிவிட முடியாது. உண்மையில் கட்சிக்குள் இருந்த பல்வேறு விதமான உள்ளக முரண்பாடுகள் மற்றும்தனிமனிதமுனைப்புக்கள்போன்றவற்றால் உருவாகிய விடயம் தான் இந்த போட்டி. கடந்த காலங்களில் தலைவர்களாக இருந்தவர்கள் தம் முடைய கடமைகளையும் பொறுப்புகளையும் சரியான முறையில் செய்திருந்தால் இவ்வாறான ஒரு நிலைமை உருவாகி இருக்காது.

அதே வேளையில் இவ்வாறு போட்டியிடம்பெறுகிறது என்பதும் ஒரு நல்ல விடயம் தான். ஏனென்றால் காலம் காலமாக தங்களுக்கு இடையே தலைவர் செயலாளர்களை தீர்மானிப்பதுதான் இவ்வளவு காலமும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இப்போதுதான் முதல் முறையாக அங்கத்தவர்களுடைய உதவியுடன் தலைவர்களை தேடுகின்ற ஜனநாயக ரீதியான பண்பாடு ஒன்று உருவாகி இருக்கின்றது. இதனை ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் வரவேற்கத்தக்கதாகவும் நாம் பார்க்கலாம்.

ஆனால் போட்டி தீவிரமடையும் போது அபத்தமாக சில விடயங்கள் வெளியில் வருவதும் குழு நிறைவாதங்கள் மேலங்குவதும் கட்சியை பலவீனப்படுத்துவதாகவும் இருப்பை கேள்விக்கு உள்ளாக்குவதாகவும் அமைந்து விடலாம். இது எதிர்கால பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தலில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். அதனால் இந்த விடயத்தையிட்டும் நாங்கள் நிதானமாக சிந்திக்க வேண்டிய நிலைமையில் உள்ளோம்.

**தமிழரசு கட்சியின் கடந்த கால தலைமையில் விட்ட தவறுகள் தான் புதிய தலைமை ஒன்றை தேட வேண்டிய அவசர தேவை ஒன்று உருவாகி இருக்கின்றதா?**

இதனை அவசரமான தேவையான கூற முடியாது இது 10 வருடங்களுக்கு முன்னரே நடந்திருக்க வேண்டிய ஒரு விடயம். கடந்த பத்து வருட காலமாக தமிழரசுக் கட்சியின் தலைமை பதவி மாற்றப்படவில்லை. அது ஒரு சிலரினுடைய ஏக போக உரிமையாகத்தான் இருந்து வந்திருக்கின்றது. அவர்களுடைய பலவீனங்கள், தேக்க நிலைகள், அசமந்த போக்குகள் போன்ற அனைத்தும் சேர்ந்துதான் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுத்தியது.

இப்போது நாங்கள் ஒரு நிலை மாறு காலத்தில் இருக்கின்றோம். ஏனென்றால் இலங்கையில் மட்டுமல்ல சுமார் 70 நாடுகளில் இந்த வருடத்தில் தேர்தல் நடைபெறப் போகின்றது. அதாவது உலகத்தில் 50 வீதத்திற்கு அதிகமானவர்கள் வாக்களிக்க போகின்றார்கள். இதனால் உலக நிலைமைகள் மாறப் போகின்றது. அவர்களுடைய கொள்கைகள் மாறப் போகின்றது. இந்த இடத்தில் நாங்கள் தீர்க்கமாக பணியாற்ற வேண்டியிருக்கின்றது. தமிழ் மக்களுடைய அபிலாசைகளையும் எம் மீது திணிக்கப்பட்டிருக்கின்ற இன அழிப்பு யுத்தத்தையும் எவ்வாறு கையாள்வது என்பதில் நாங்கள் தீர்க்கமாக செயல்பட வேண்டி இருக்கின்றது. இவ்வளவு காலமும் காத்திருந்து தவறவிட்ட வாய்ப்பை நாங்கள் இனிமேலும் தவற விடக்கூடாது என்பதற்காக அவசரமாக இதனை செய்ய வேண்டி இருக்கின்றது.

**விடுதலை புலிகள் அமைப்பின் காலத்தில் தமிழ் கட்சிகளுடைய உருவாக்கப்பட்ட ஒற்றுமை கடந்த 15 வருட காலத்தில் காணாமல் போய்விட்டது. புதிதாக வரப் போகின்ற தமிழரசு கட்சியின் தலைவர் அந்த ஒற்றுமையை மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பாரா?**

உண்மையில் இந்த ஒற்றுமை என்ற வார்த்தையை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாங்கள் தவறாகத்தான் பயன்படுத்துகின்றோம். நீ என்னோடு வந்து சேர வேண்டும் என்பதுதான் ஒற்றுமை என்று நாங்கள் நினைக்கின்றோம். ஒவ்வொரு கட்சிகளும் இயக்கங்களும் தனி நபர்களும் கூட அவ்வாறு தான் சிந்திக்கின்றார்கள். அதாவது என்னுடைய நிலைப்பாட்டுக்கு நீ வருவாயாக இருந்தால் அதுதான் ஒற்றுமை என்பது அவருடைய கருத்து.

ஒற்றுமை என்பது பரஸ்பர உடன்பாட்டின் மூலமாக இரு பக்கமும் இணைந்து அல்லது பல பக்கங்களுடன் இணைந்து செயற்படுவது. அவ்வாறு பார்க்கும் போது இந்த ஒற்றுமை என்பதில் முதலாவதாக இருக்க வேண்டிய விடயம் வெளிப்படை தன்மை. முழுமையான வெளிப்படைத் தன்மை இருக்கின்ற நிலைமையில் தான் இந்த ஒற்றுமை என்பது பரஸ்பரம் இருக்கும்.

தமிழரசு கட்சிகள் கடந்த காலத்தில் இதுதான் நடைபெற்றது. யாரோ ஒருவர் தீர்மானிப்பார். மற்றவர்கள் ஒற்றுமையின் பேரில் அதனை சலித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் மறுத்து கேள்வி கேட்கவில்லை. அல்லது விமர்சனம் செய்வதில்லை. இவ்வாறு பல சம்பவங்கள் இடம் பெற்று இருக்கின்றது. ஒற்றுமை என்பது வெறுமனே தேர்தல் காலங்களில் அனைவரும் ஒன்றாக வந்து வாக்கு போடுங்கள் என அழைப்பது அல்ல. மக்களை ஒருங்கிணைப்பதற்கான அவர்களை கட்டமைப்பதற்கான ஒரு தொலை நோக்கு திட்டம் இருக்க வேண்டும்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழ் தேசிய உணர்வு இல்லாமல் போனால் விடுதலை உணர்வும் இல்லாமல் போகும்

மட்டு.நகரான்

தமிழ் தேசிய உணர்வு என்பது தமிழர்களின் விடுதலையுடன் இரண்டறக்கலந்த விடயமாக வுள்ளது. தமிழ் தேசிய உணர்வு என்பது தமிழர்கள் மத்தியிலிருந்து இல்லாமல்போனால் தமிழர்களின் விடுதலை உணர்வும் இல்லாமல்போகும் நிலையே ஏற்படும். இதுவே இன்று வடகிழக்கில் இடம்பெற்றுவருகின்றது. தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள போட்டிகளும் குத்துவெட்டுகளும் தமிழ் தேசிய உணர்வுகளை இல்லாமல்செய்துவிடுமோ என்று அச்ச நிலை இன்று தோன்றியிருக்கின்றது.



தமிழ் தேசிய உணர்வு என்பது இன்று இளம் சமூகத்தின் மத்தியில் ஊன்று நிலையில் காணப்படுகின்றது. இதனை பலப்படுத்த வேண்டியது அனைவரது கடமையுமாகும். ஆனால் கட்சிகளிடையேயும் கட்சிகளுக்குள்ளும் நிலவும் அதிகாரப்போட்டிகள் இளம் சமூகத்தினை தவறான நிலைக்கு கொண்டுசென்றுவிடுமோ என்ற அச்சம் இன்று தமிழ் தேசியத்தினை நேசிக்கும் அனைவரது மனங்களிலும் எழுந்திருக்கின்றது.

வடகிழக்கு மாகாணத்தில் கிழக்கு மாகாணத்தின் நிலைமையானது பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுவரும் மாகாண மாகவுள்ளது என்பதை கடந்த காலத்தில் நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றோம். கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமையினை நாங்கள் கையாளவேண்டுமானால் தமிழ் தேசிய பரப்பில் செயற்படும் கட்சிகள் ஒன்றுபடவேண்டும். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள நிலைமை கவலைக் குரியதாகவே இருக்கின்றது.



இன்று தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள போட்டி நிலைமைகள் என்பது கிழக்கில் எதிர்காலத்தில் தமிழ் தேசியத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது. தமிழ் தேசியத்தையும் இலங்கை தமிழரசுக்கட்சியையும் என்றும் பிரிக்கமுடியாது என்ற உண்மையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசிய தலைவர் வே.பிரபாகரன் அவர்களே உணர்ந்ததன் வெளிப்பாடாகவே அக்கட்சியின் சின்னம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமாக அறிவிக்கப்பட்டது.

தமிழர்கள் அந்த சின்னத்தின் கீழ் தமிழ் தேசிய உணர்வுடன் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற நோக்குடன் தலைவர் இதன் செய்தார்.

ஆனால்காலப்போக்கில்தமிழ்தேசியத்தின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அக் கட்சிகளுக்குள்நுழைந்துதீர்மானிக்கும்இடங்களில் அமர்ந்ததன் காரணமாக தமிழரசுக்கட்சியின் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை என்பது கேள்விக்குட்படுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாகவே நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை தமிழரசுக்கட்சியில் கிழக்கில் தெரிவுசெய்யப்பட்டுவந்த நிலையில் இம்முறை இரண்டு பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த கட்டுரையானது இலங்கை தமிழரசுக்கட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டையோ அல்லது அவற்றிற்கு ஆதரவு தேடு தம் நிலைப்பாட்டைக்கொண்டே இந்த கட்டுரை எழுதப்படவில்லை. ஆனால் கிழக்கினைப் பொறுத்த வரைக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தேவைப்பாடு என்பது மிகவும் அவசியமான ஒரு விடயமாகவே பார்க்கப்பட வேண்டியதாகவுள்ளது.



கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் அதிகளவாக தமிழ் பேசும் மக்கள் கொண்ட மாகாணமாகவுள்ளது. இன்று தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையாக கொண்ட இந்த மாகாணத்தில் அரசியல் ரீதியாக ஏற்படும் முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் கையாளக்கூடிய நிலைமையானது தமிழரசுக்கட்சிக்கு இருக்கின்றது. காரணம் முஸ்லிம்களில் பெரும்பான்மையானவர்கள் இலங்கை தமிழரசுக்கட்சி மீது ஓரளவு நம்பிக்கை வைத்திருக்கும் நிலைமை காணப்படுகின்றது. இதனை கருத்தில்கொண்டே யுத்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிட்ட காலப்பகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களே வெற்றிபெறும் நிலைமை காணப்பட்டது. அதனை விடுதலைப்புலிகளும் ஆதரிக்கும் நிலைமையும் காணப்பட்டது. இதற்கு காரணமாக தமிழ்-முஸ்லிம்களின் உறவு என்பதே பிரதானமாக நோக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி கிழக்கில் கடந்த காலத்தில் பௌத்த மேலாதிக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு அல்லது அவற்றிற்கு எதிராக மக்களை அணிதிரட்டி போராடுவதற்கு பெரும் பங்காற்றியது தமிழரசுக்கட்சியாக இருக்கின்ற காரணத்தினாலும் இலங்கை தமிழரசுக்கட்சியின் தேவைப்பாடு என்பது கிழக்கில் தொடர்ச்சியாக உணரப்பட்ட விடயமாகவே இருந்துவந்தது.

ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொள்வதில் காலத்துக்குக் காலம் முன்னெடுக் கப்பட்ட போராட்ட முறைகள் மாற்றம் பெற்று ஜனநாயக வழி சாத்தியமற்றது என்ற முடிவின் பலனாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இந்தியாவினுடைய உள் வருகையுடன் நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தை, இதனையடுத்து, ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் காரணமாகப் போராட்ட இயக்கங்கள் பல அரசியல் கட்சிகளாக மாறிப் போயின.

ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகள் தமத தாயக விடுதலையில் உறுதியான நிலைப் பாட்டுடன் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடாக் கொள்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்தனர். ஆனாலும், 2009 மே மாதம் அதனையும் மௌனிக்கச் செய்த மாதமாகப் போனது.

தமிழர்களுடைய அரசியல் உரிமைக்கான பிரச்சினை இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இதுவரையில் தீர்வை எட்டுவதற்கு முடியாததாகவே தொடர்கிறது. இலங்கை அரசியலமைப்பின் 22 திருத்தங்களில் எதுவும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷையை நிறைவேற்றவில்லை.




இவ்வாறான நிலையில் தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவ போட்டி அதன் ஊடாக இடம்பெற்றுவரும் வாதப்பிரதிவாதங்கள் என்பது கிழக்கில் தமிழ் தேசியத்தினை குழிதோண்டிப்புதைக்கும் செயற்பாடாகவே பார்க்கவேண்டியுள்ளது.

இன்று இவ்வாறான விடயங்களை கைகளில் எடுத்து பிள்ளையான் போன்றவர்களின் ஆதரவாளர்கள் தமிழ் தேசியத்தினை எள்ளி நகையாடும் நிலைமையினையும் காணமுடிகின்றது. சமூக ஊடகங்களின் தாக்கங்கள் அதிகளவில் உள்ளதனால் தமிழ் தேசியத்திற்கு எதிராக பிள்ளையான் போன்றவர்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பிரசாரத்திற்கான வாய்ப்புகள் இன்று வழங்கப்பட்டுவருகின்றன.

மீண்டும் கிழக்கில் பிரதேசவாதம் எழும் நிலைமை காணப்படுகின்றது.



இலங்கை தமிழரசுக்கட்சியிலிருந்து பிரிந்து செல்வதற்காக முன்னாள் அமைச்சர் இராஜதுரை அவர்கள் எவ்வாறான நிலையினை கைக்கொண்டாரோ, தமிழீழ விடுதலைப்புலிகளிலிருந்து பல்வேறு குற்றச்சாட்டின் கீழ் கருணா விலக்கப்பட்டபோது பிரதேசவாதத்தை எவ்வாறு கையிலெடுத்தாரோ அதேபோன்றதொரு பிரதேசவாதத்தினை கிழக்கில் விதைப்பதற்கு பிள்ளை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

துரைசாமி நடராஜா

# இனவாத விதைப்பு

இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் சமமானவர்களாக மதிக்கப்பட வேண்டும். எனினும் மலையக மக்கள் இதில் உள்ளீர்க்கப்படாது தொடர்ச்சியாகவே புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகமாகவே இருந்து வருகின்றமை தொடர்பில் பலரும் தமது விசனப் பார்வையினை செலுத்தி வருகின்றனர். '200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி' நிகழ்வு அண்மையில் நுவரெலியாவில் இடம்பெற்ற நிலையில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தனது உரையிலும் இதனைச் சுட்டிக்காட்டி இருந்தார். மலையக சமூகம் இந்நாட்டில் ஒரு தனித்துவமான சமூகமாக மேலெழும்பிவரும் நிலையில் இத்தகைய புறக்கணிப்புகள் அச்சமூகத்தின் எழுச்சியை மழுங்கடிக்கச் செய்வதாக அமையும். எனவே ஆட்சியாளர்கள் இச்சமூகத்தின் மேம்பாட்டிற்கு தம்மாலான உச்சகட்ட பங்களிப்பினை வழங்கி கைதூக்கி விடவேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.



மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து இந்த வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றன. மலையகத்தில் மட்டுமல்லாது வடக்கு கிழக்கு பகுதிகளிலும் மலையக மக்களின் எழுச்சிக்கும், அவர்களது 200 வருடகால வரலாற்றை நினைவுகூறும் முகமாகவும் நிகழ்வுகள் பலவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது. மலையக மக்களின் 200 வருடகால பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுவரும் இத்தகைய நிகழ்வுகள் குறித்து பல்வேறு விமர்சனங்களும் இருந்து வருகின்றன. இந்நிகழ்வுகளில் பல இம்மக்களின் அபிவிருத்திக்கு தோள்கொடுப்பதை விடுத்து அரசியல் மற்றும் சுய இலாபம் கருதிய நோக்கில் இடம்பெற்று வருவதாகவும் விமர்சனங்கள் இருந்து வருவதும் தெரிந்ததாகும். எது எவ்வாறெனினும் இந்நாட்டில் மலையக மக்கள் கால்பதித்து 200 வருட வரலாற்றினை நினைவுகூறும் இத்தருணம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும் என்பதனை மறுப்பதற்கில்லை.

19 ம் நூற்றாண்டில் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் தமிழகத்திலிருந்து அழைத்துச் சென்று குடியேற்றப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு பல நாடுகளில் சோகம் மிக்கதாகவே காணப்படுகின்றது. அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டு முதலில் பிரித்தானிய, பிரான்சிய ஆட்சியாளர்களாலும், பின்பு சுதேச ஆட்சியாளர்களாலும், அந்தந்த நாடுகளையும் தீவுகளையும் சேர்ந்த சுதேச இனத்தவர்களாலும், தொழிலாளர்களல்லாத ஏனைய தமிழர்களாலும், ஏனைய இந்தியர்களாலும், வணிகர்கள், அதிகாரிகள், தோட்ட உத்தியோகத்தர்கள் பிற அலுவலர்கள் போன்ற பலராலும் இத் தொழிலாளர்கள் கொடூரமான சுரண்டல்களுக்கு உள்ளாகினர்.

இந்நிலையில் இம்மக்கள் குடியேற்றப்பட்ட நாடுகள் மற்றும் தீவுகளில் வாழும் தமிழ் தொழிலாளர்களில் பலர் இன்று தமிழ் பேசவோ எழுதவோ வாசிக்கவோ தெரியாத நிலையிலேயே இருந்து வருவதாக புத்திஜீவிகள்



சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் இவர்களில் பலர் சுதேச இனத்தவர்களுடன் கலந்து விட்டனர். அவ்வாறு கலப்புற்ற நிலையில் அவர்கள் பெருமளவு உரிமைகளுடனும் சலுகைகளுடனும் ஓரளவு வளத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். இதேவேளை தொழிலாளர்களில் கணிசமானவர்களின் இளந்தலைமுறையினர் கல்வி கற்று பிற வேலைவாய்ப்புகளைப் பெற்று முன்னேறத் தொடங்கியுள்ளனர் என்பதும் புத்திஜீவிகளின் கருத்தாகும்.

இந்த வகையில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட தொழிலாளர்கள் பல்வேறு புறக்கணிப்பிற்கும் உள்ளானமை தெரிந்த விடயமாகும். ஏனைய இனத்தவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருந்த இவர்கள் அவர்களின் அலட்சியத்திற்கும் உள்ளாகி இருந்தனர். இம்மக்களுக்கான உரிமைகள் உரியவாறு கிடைக்காத நிலையில் ஒதுக்கப்பட்டவர்களாகவே இவர்களின் வாழ்க்கை நிலைமைகள் தொடர்ந்து கொண்டிருந்தன. இந்திய தமிழ்த் தொழிலாளர்கள் இங்கு தருவிக்கப்பட்டு குடியேற்றப்பட்ட தோட்டங்கள் பெரும்பாலும் மலைப்பாங்கான தொலைப்பிரதேசங்களில் அமைந்திருந்ததால் அவர்களது பல்வேறு தேவைகளையும் தோட்டங்களுக்குள்ளேயே பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இம்மக்களின் நலன்கருதி சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட போதும் இவ்வசதிகள் ஒருபோதும் ஆகக்குறைந்த மட்டத்திற்கும் மேலாக இருக்கவில்லை என்று பேராசிரியர் மு.சின்னத்தம்பி குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.



மலையக சமூகத்தினர் கல்வியினைப் பெற்று விடக்கூடாது என்பதில் நிர்வாகத்தினர் கவனமாக இருந்தனர். இவர்கள் கல்வியை பெற்று விட்டால் அது தமது பணிகளுக்கு இடையூறாக அமையும் என்றும் கருதினர். இதைப்போன்றே இம்மக்களுக்கு வாக்குரிமை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும் எதிர்ப்புகள் வலுப்பெற்றன. டொனமூர் ஆணைக் குழுவினுடைய சிபாரிசில் அபாய அறிவித்தலாக அமைந்தது இந்தியத் தொழிலாளருக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணை என்று டி.எஸ். சேனநாயக்கா கூறியிருந்தார்.

இந்தியாவை பொறுத்தவரையில் சிங்களவர் சிறுபான்மையினர் மாத்திரமன்றி அநீதிக்குப் பலியாவர் என்றும் அவர் கூறினார். தோட்டத் தொழிலாளரை அரசியலில் இருந்து வெளியேற்றுதல் 1920 களின் பிற்பகுதியில் சிங்கள பூர்ஷ்வாக்களால் தலைமை தாங்கப்பட்டது. வர்க்க உணர்வு கொண்ட தோட்டத் தொழிலாளர் இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுடன் இணைதல் என்பது, நிலவும் சிங்கள சமூக அமைப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்பதை உணர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் தமது பலம் நாட்டில் குறைந்துவிடும் என்று பிரச்சாரம் செய்தனர். 1920 களின் பிற்கூற்றில் இந்தியத் தொழிலாளரின் அரசியல் உரிமைகளுக்கு எதிராக இனவாதப் பிரசாரம் சிங்கள அரசியல்வாதிகளால் முதன் முதலில் முன்னெடுக்கப்பட்டது. எனினும் ஏ.ஈ.குணசிங்கவின் சமூக - ஜனநாயக தலைமையில் இன ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு ஆகியவை உச்சநிலையில் இருந்த காலகட்டத்தில் சிங்கள தொழிலாள வர்க்கம் தோட்டத் தொழிலாளருக்கு எதிரான நடவடிக்கைகளை வன்மையாக எதிர்த்தது என்ற வலியுறுத்தல்களுமுள்ளன.

### மக்களின் உரிமைக்குரல்

மலையக மக்களின் குடியிருப்பு பிரச்சினை இன்னும் துன்பத் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றது. 1996 ம் ஆண்டின் தகவலொன்றின்படி பெருந்தோட்ட எல்லைக்குள் 213321 பழைய லயன் முறையை அடிப்படையாகக் கொண்ட வீடுகளும் அதில் 104556 அலகுகள் இரட்டை லயன் காம்பரா முறையைக் கொண்டதாகவும் இருந்தன. 108825 அலகுகள் ஒற்றை லயன் காம்பரா முறையைக் கொண்டதாகவும் 70 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதாகவும் காணப்பட்டது. சமகாலத்தில் மலையக மக்களின் குடியிருப்பு பிரச்சினை உக்கிரமடைந்து காணப்படும் நிலையில் சிலர் தற்காலிக வீடுகள், தற்காலிக குடிசைகள் என்பவற்றில் வாழ்ந்து வருகின்றனர். லயத்து வாழ்க்கை முறையை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் தனிவீட்டு கலாசார முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் இவையனைத்தும் ஆமை வேகத்திலேயே இடம்பெறுகின்றன. இதனிடையே 'நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பு செய்து வரும் தோட்ட மக்களின் வாழ்க்கையை உயர்த்த ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமும் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை.



இன்னும் அவர்கள் லயன் அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். அடிப்படை வசதிகள் கூட இன்னும் செய்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. 200 வருடங்களாகியும் பெருந்தோட்ட மக்களுக்கு வீடும் இல்லை. மரணித்தால் மயானமும் இல்லை. தோட்ட மக்களின் சம்பள பிரச்சினையும் இழுபறி நிலையிலேயே இருந்து வருகின்றது. 200 வருடங்களாக அவர்கள் தோட்டங்களில் வேலைசெய்து வந்தாலும் இன்னும் நாட்சம்பளத்துக்கே தொழில் புரிந்து

தொடர்ச்சி 09ஆம் பக்கம்



# தமிழர் திருநாள்

## தமிழ்த் தேசிய பெருநாள்!

உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழர் அனைவருக்கும் தமிழர் நாட்டுக் கட்சியின் இதயம் கனிந்த தமிழர் திருநாள் வாழ்த்துக்கள். இந்நந்நாளில், உங்கள் வாழ்வில் எல்லா வளங்களையும் பெற்று இன்புற்று வாழ வாழ்த்துகிறோம்.

பொங்கல் விழா என்பது எந்த சாதிக்கும், எந்த மதத்துக்கும் உரிய விழா அல்ல, அது தமிழரின் இனவிழா என்பதை ஆராய்ந்து அறியும் பொழுது, தமிழர் இனத்தின் மேன் மையை எண்ணி பெருமைப்படாமல் இருக்க முடியவில்லை.

உலகில் உள்ள எல்லா மதங்களிலும் ஏராளமான சடங்குகள், சம்பிரதாயங்கள் உள்ளன. அவை பெரும்பாலும் அறிவியலுக்கு புறம்பானவை என்பதே உண்மை. ஆனால், தமிழர் திருநாளாம், பொங்கல் விழா என்பது ஓர் அறிவியல் விழா.

நாம் வாழும் உலகம் சூரியனின் ஒரு பகுதி என்பதை நினைவூட்டும் விழா என்ற வகையிலும், உலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் மண்ணும், உழவும் தான் ஆதாரம் என்பதை நினைவூட்டும் விழா என்ற வகையிலும் இது ஓர் அற்புதமான அறிவியல் விழா. இயற்கையின் அங்கம் நாம் என்பதை நினைவூட்டும் இயற்கை விழா.

இனி, பெருமைமிக்க நம் தமிழர் திருநாள் விழாவை அழிக்கவும், நம் அடையாளங்களைத் திருடவும் துடிக்கும் சிலர் இவ்விழாவை, ‘சங்கராந்தி’ என்றும் ‘திராவிடத் திருவிழா’ என்றும் பெயர் மாற்றம் செய்து வருவதை எல்லோரும் ஒருசேர எதிர்க்க வேண்டும்.

எதன்மீதும் கவனமற்று உள்ளதால்தான் எல்லாவற்றையும் இழந்தோம். உலகை ஆண்ட இனம், உலகம் முழுவதும் பேசப்பட்ட மொழிக்கு சொந்தக்கார இனம் இன்று அடிமைப் பட்டுக்கிடக்க காரணம் நம் அறியாமையே!



பேராசிரியர்
ஆ. அருள் இனியன்

புதிதாக பிறக்கும் தைத் திருநாள் தமிழர் அறியாமை இருளகற்ற பிறக்கட்டும். தமிழர் இனம் தமிழராக மட்டுமே ஒன்றுபட பிறக்கட்டும்.

பொங்கல் பானைக்கு நீங்கள் வைக்கும் தீ, அல்லவைத் தேய நல்லவை வளர உதவட்டும். தமிழ்தேசிய அரசியல் எனும் ‘தீ’ தமிழர் மனம் முழுவதும் பற்றிப் பரவ உதவட்டும்.

உங்கள் ஆழ் மனதில் துளியேனும் சாதிய எண்ணமோ, மத விருப்பமோ உள்ள வரை உங்களால் தமிழ்த் தேசிய அரசியலைப் புரிந்து கொள்ள முடியாது. எனவே, நீங்கள் இந்த பொங்கல் நன்னாளில், ‘நாம் யார்?’, ‘நம் இனத்தின் பெருமைகள் என்ன?’, “உலகை ஆண்ட நாம் ஏன் இன்று உலகம் முழுவதும் அகதியாக வாழ்கிறோம்?” என்ற கேள்விகளை எல்லாம் எழுப்பி, அதற்கான விடை தேடிப் பயணிக்க தொடங்குங்கள்.

தை மகள் உங்கள் கேள்விகளுக்கு விடையோடு வீடு வருகிறாள்...
வாசலில் கோலமிட்டு, புத்தாடை சூடி, புதுப்பானையில் பொங்கலிட்டு அவளை வரவேற்று முழக்கம் இடுங்கள்...
பொங்கலோ பொங்கல்...
இது தமிழர் திருநாள் பொங்கல்...
பொங்கலோ பொங்கல்...
இது தமிழர் இனத்தின் பொங்கல்...

**வாழ்க தமிழர் நாடு!**

## இனவாத ... தொடர்ச்சி ...

வருகின்றனர்’ என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் அண்மையில் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்திருந்தார்.

மலையக மக்களின் சுகாதார, மருத்துவ நிலைமைகளும் திருப்தி தருவதாக இல்லை . தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படும் சுகாதார, மருத்துவ வேலைத்திட்டங்கள் மலையகத்திற்கு எட்டாக்கனியாகவே இன்னுமுள்ளது. தோட்டப் புற வைத்தியசாலைகள் பல குறைபாடு களுடன் இயங்கி வரும் நிலையில் இவ் வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்று சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

இலங்கையில் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் அதிகமுள்ளன. இந்நிலையில் இவற்றை தீர்த்துவைக்கும் நோக்கில் அழுத்தம் கொடுக் காது முரண்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தி ஒற்றுமைக்கு குந்தகமாக செயற்பட்ட அரசியல்வாதிகளும் இருக்கத்தான் செய்கின்ற னர்.’இலங்கை நாடானது அதன் 75 சதவீத மக்களான சிங்களவர்களுக்கே சொந்தமானது.

சிறுபான்மையினர் எங்களுடன் இந் நாட்டில் வாழலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகள் என்ற அடிப்படையில் சாத்தியமற்றதான எவற்றை யும் கோரிக்கையாக முன்வைக்க முடியாது. இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமான நிலையில் ஏனைய சிறுபான் மையினர் அவர்களுடன் வாழத் தெரிந்துகொள்ள வேண்டும்’ என்ற ரீதியில் இலங்கையின் முக்கிய அரசியல்வாதியொருவர் கடந்த காலத்தில் ‘கனடியன் நெஷனல் போஸ்ட் ‘ நாளிதழுக்கு நேர்காணலொன்றினை வழங்கி இருந்தார். இத்தகையோரால் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் உரிமைகள் கேள்விக்குறியாகின.

இனவாத சிந்தனையாளர்கள் மலையக மக்கள் உரிமைக்குரல் கொடுத்தபோதெல்லாம் அவர்களின் குரல்வளையை நசுக்குவதிலேயே ஆர்வம் செலுத்தினர். அம்மக்களின் இருப்பை சிதைத்து அம்மக்களை நிர்வாணப்படுத்தும் முயற்சிகளே முடுக்கி விடப்பட்டன.பெருந் தோட்ட தேயிலை நிலச் சுவீகரிப்பு, சிறுதோட்ட அபிவிருத்தி மற்றும் பெருந்தோட்ட மழுங் கடிப்பு, பொருளாதார முடக்கம் உள்ளிட்ட பல நடவடிக்கைகளும்மலையகமக்களின்எழுச்சிக்கு ஆப்பு வைத்து அவர்களின் தேசிய நீரோட்டக் கனவை வேரறுப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும். இந்நடவடிக்கைகள் மூலமாக இனவாதிகள் வெற்றி கண்ட சந்தர்ப்பங்களும் அதிகமுள்ளன.

இலங்கையின் அரசியல் யாப்பிற்கமைய சகலரும் சமமாக மதிக்கப்படுதல் வேண்டும். இன,மத,மொழி ரீதியாக எவருக்கும் வேறுபாடு காட்டப்படலாகாது. எனினும் இது எந்தளவுக்கு சாத்தியமாகி இருக்கின்றது என்பது தொடர்பில் திருப்தியற்ற வெளிப்பாடுகளே அதிகமுள்ளன. இக்கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா அண்மையில் நுவரெலியாவில் கருத்து தெரிவித்திருந்தார்.

200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி நிகழ்வு அண்மையில் நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் பல முக்கிய கருத்துக்களை வெளிப்படுத்தி இருந்தார்.’இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்று அரசியலமைப் பில் குறிப்பிடப்பட்டுள்ளது.அவர்கள் அனை வரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அரசி யலமைப்பில் அவ்வாறு கூறப்பட்டாலும் தற்போது வரையிலும் யதார்த்தத்தில் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய மரியாதையும் பலமும் இன்னும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் மலையக மக்கள் உயிர் வாழ்வதற்கான வாழ்வாதார உரிமையை நாம் எமது ஆட்சியில் பெற்றுக் கொடுப்போம். மலையக மக்கள் தொழிலாளர்களவே அடை யாளப்படுத்தப்படும் நிலையில் தேயிலைத் தொழிற்றுறையின் தொழில் முயற்சியாண்மை உடையவர்களாக மாறவேண்டும்’ என்று கூறும் சஜித், மலையக மக்களை தமக்கான காணி உரிமையைக் கொண்ட சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான அழுத்தம் தமது ஆட்சியில் கொடுக்கப்படும் என்றும் உறுதியளித்திருக்கின்றார். கல்வி, சுகாதாரம், குடியிருப்பு போன்ற பல துறைகளிலும் இம் மக்களை மேம்படுத்த வேண்டியதன் அவசிய மும் அவரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.எவ்வா றெனினும் நாடுயர தம்மை அர்ப்பணித்த மலையக சமூகம் நடுத்தெருவில் உரிமையின்றி அல்லல்படுவது விரும்பத்தக்கதல்ல. இதனை கருத்தில் கொண்டு அம்மக்களுக்கான உரிமை களைப் பெற்றுக்கொடுக்க ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்.

• • •

# தமிழர் வள ஆலோசனை மையம் மற்றும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் இணைந்து ஆண்டுதோறும் நடத்தும் தமிழர் திருநாள் விழா, இவ்வாண்டு (2024) பற்றிய ஒரு பார்வை

எமது எண்ணங்களைப் பிறருக்கு தெரிவிக்கவும், பிறருடைய உணர்வுகளை எம்மால் புரிந்து கொள்ளவும் உதவுவது மொழியாகும். காலத்தால் பழமையான, ஆதிகால மனிதனின் அற்புத மொழியாக தமிழ்மொழி திகழ்கிறது. இலக்கியமும், இலக்கணமும் கொண்டு காலத்தைவென்று பல்வேறு நூற்றாண்டுகள் கடந்து இன்றும் இனிமை குறையாமல் கற்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழ் சிறப்பினை வார்த்தைகளால் சொல்ல இயலாது. காலங்கள் மாறினாலும் கண்டங்கள் பல அழிந்தாலும் அழியாத சிறப்புடைய எமது தமிழ்மொழியை அடுத்த சந்ததியினருக்குத் தடையின்றிக் கொண்டுசெல்லும் பொறுப்பை தமிழர் வள ஆலோசனை மையம் மற்றும் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் 32 ஆண்டுகளாக நோர்வேயில் மேற்கொள்கிறது. இன்று 17 வளாகங்களை உள்ளடக்கி பெருவிருட்சமாக வளர்ந்திருக்கும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் 1600க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலை உட்பட தமிழ்மொழி பண்பாடு என்பவற்றை கற்று வருகின்றனர்.



மொழியும், கலையும், பண்பாடும், வளம் பெற்று வளர்ச்சியும் உயர்ச்சியும் அடையும் பொழுதே தேசிய இனக் கட்டமைப்பு இறுக்கம் பெறுகின்றது என்ற எமது தேசியத் தலைவரின் சிந்தனை வரிகளைக் கருத்திற்கொண்டு, தமிழரின் மரபுகளையும் பண்பாட்டு மூலங்களையும் அறிவியல், கல்வி, கலை, வரலாறு எனப் பலவற்றையும் வளர்க்கும் இடமாக அமைந்து தன்னுள் பல கிளைகளையும் அதில் பல மாணவர்களையும் உருவாக்கி வரும் நோர்வே அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடமானது, தமிழர்களுக்காக சொந்தக் கட்டடத்தை உருவாக்கி அன்னை பூபதி மாணவர்களின் கல்விக்காகவும் தமிழர்களின் பொதுத் தேவைக்காகவும் இயங்கி வருகிறது. தமிழர்களுக்கான எதிர்காலத் தேவைகளைத் திட்டமிட்டு வழங்கிவரும் தமிழர் வள ஆலோசனை மையத்துடன் இணைந்து நடாத்தும் தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழாவினை ஆண்டு தோறும் அனைவரும் வியக்கத்தக்க வகையில் மிகப் பெரியளவில் நோர்வே நாட்டின் பல அரசியல் பிரமுகர்களையும் மாவட்ட மற்றும் மாநகரத் தலைவர்களையும் கலாச்சாரத் தலைவர்களையும் அழைத்து நடத்தி வருகின்றமை பெருமைக்குரியதாகிறது.

**தமிழர் திருநாள் - பொங்கல்விழா 2024**

அந்த வகையில் இவ்வாண்டு 13.01.2024 சனிக்கிழமை அன்று மண்டப வாயிலிலிருந்து குறித்த நேரத்தில் அரங்கை நோக்கி அன்னை மாணவர்களால், இன்னியம் முழங்க விருந்தினர்களும் பணியாளர்களும் அழைத்துவரப் பட்டார்கள். தொடர்ந்து மங்கலவிளக்கேற்றல் நிகழ்வு இடம் பெற்றது. அனைத்து வளாக நிர்வாகப் பொறுப்பாளர்களால் மங்கலவிளக்கேற்றி அன்றைய விழா மிகச் சிறப்பாகத் தொடக்கிவைக்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை மீட்புப் போரில் தம் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களையும், இலங்கை இந்தியப் படைகளால் கொல்லப்பட்ட மக்களையும் நாட்டுப்பற்றாளர்களையும் நினைவுகூரும் முகமாக அகவணக்க நிகழ்வு இடம்பெற்றது.

## தமிழர்வள ஆலோசனை மையம், அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம், நோர்வே

தொடர்ந்து தமிழர்வள ஆலோசனை மைய நிருவாக உறுப்பினர்களால் அங்கு வருகை தந்திருந்த அனைவரையும் தமிழ்ப் பற்றோடு தூய தமிழிலும் பொங்கல்விழாவிற்காக அழைத்து வருகைதந்த பிறமொழி விருந்தாளிகளை உள்வாங்கும் விதமாக வாழிடமொழியான நோர்வேஜிய மொழியிலும் வரவேற்புரையை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து புல்லாங்குழல், வீணை, யாழ், மிருதங்கம், வயலின் இன்னும் பல்வகை இசைக்கருவிகளை ஒரே அரங்கில் இசைக்கவைத்த பல்லியம் நிகழ்வு மிகச்சிறப்பாக அன்னை பூபதியில் பல ஆண்டுகளாகப் பணியாற்றும் ஆற்றல் மிக்க ஆசிரியரின் வழிகாட்டலில் அன்னை பூபதி மாணவர்களால் வழங்கப்பட்டது.



பல்லியத்தைத் தொடர்ந்து அன்றைய நாள் விருந்தினரில் ஒருவராக வந்திருந்த ஒஸ்லோ மாநகர கலாச்சார அமைச்சரின் உரை இடம்பெற்றது. அவர் இந்த விழாவின் ஏற்பாட்டைப் பற்றியும், தமிழர்களின் மிகப் பழைமையான பண்பாடுகளைப் பேணுதல் பற்றியும் அன்னை பூபதியின் வளர்ச்சியைப் பற்றியும் மிக அருமையாக உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றியவர்களும் அன்னையின் வளர்ச்சியையும் தமிழர்களின் பண்பையும் உயர்வையும் பற்றியதாகவே இருந்தது.



உரைகளைத் தொடர்ந்து வைத்வெத் வளாக மாணவர்கள் வழங்கிய அபிநயம் இடம்பெற்றது. இந் நிகழ்வானது தமிழர்களின் கலைகளுள் ஒன்றான கோலாட்டம், கும்மி இவைகளை இணைத்து வழங்கிய ஒரு அபிநயமாக பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. இவ்வளாகத்தில் தொடக்கநிலை முதல் 7ஆம் வகுப்புவரை மாணவர்கள் கற்றுவருகின்றனர். இந்நிகழ்வின் பின்பும் விருந்தினர்கள் சிலரின் உரைகளும் இடம் பெற்றது.



தொடர்ந்து அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட றொம்மன் வளாக கலை மாணவர்கள் ‘தூய தமிழில் பிள்ளைகளுக்குப் பெயர்களைச் சூட்டுங்கள்’ என்ற பாடலுக்கு வழங்கிய நடனம் இடம்பெற்றது. நிகழ்ச்சிகளின் இடையிடையே விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. தொடர்ந்து இடம்பெற்ற உரைக்குப் பின் மீண்டும் றொம்மன் வளாக இன்னுமொரு கலைப்பிரிவு மாணவர்களின் நீரானவா, நிலமானவா, விண்ணானவா, காற்றானவா, மொழியானவா என்ற நடனம் இடம்பெற்றது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இனவழிப்பின் நோக்கத்தை நிறுவுவது இலகுவான விடயமல்ல

தமிழில்: ஜெயந்திரன்

காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைக்கு எதிராக தற்காலிக நடவடிக்கைகளை எடுக்கக் கோரி, தென் ஆபிரிக்க அரசு முறைப்படி விடுத்த அழைப்பை ஏற்று, நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் இந்த வாரம் தனது விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.



இஸ்ரேல் இனவழிப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது என்று விவாதித்த தென் ஆபிரிக்க அரசின் சட்டக்குழு, அதன் காரணமாக காஸாப் பிரதேசத்தில் அது மேற்கொண்டுவருகின்ற இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு அதற்குக் கட்டளையிட வேண்டும் என்று குறிப்பிட்ட நீதிமன்றத்தைக் கோரியிருக்கிறது,

இனவழிப்புக் குற்றம் இரண்டு விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது. ஒன்று நோக்கம், மற்றையது அதனை நிறைவேற்றுதல். இனவழிப்புக் குற்றத்தை மேற்கொள்வதாக ஒரு அரசு மேல் குற்றம் சுமத்தப்படும் போது, இந்த இரண்டு விடயங்களும் நிரூபிக்கப்படவேண்டும்.

23000 பாலஸ்தீன மக்கள் கொன்றொழிக்கப்பட்டிருக்கிறார்கள், இவர்களில் அரைவாசிப்பேர் சிறுவர்களும் இளையோரும் ஆவர். இவர்களுள் பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். காஸா சனத்தொகையின் 90 வீதமான மக்கள் தமது இல்லிடங்களை விட்டு இடம்பெயரக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள். முழுமையான முற்றுகை என்ற பெயரில் இஸ்ரேல் அரசின் தற்போதைய நடவடிக்கை, பட்டினி மூலமும் தொற்றுநோய்களின் காரணமாகவும் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் இந்தப் பிரதேசத்தில் மரணத்தைத் தழுவ காரணமாக அமைகிறது. சகட்டுமேனிக்கு மேற்கொள்ளப்படும் குண்டுவீச்சுத் தாக்குதல்களும் பாலஸ்தீன மக்களின் வதிவிடங்களை தரைமட்டமாக்கும் செயற்பாடுகளும் காஸாப்பிரதேசத்தை சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறது. மருத்துவமனைகளையும் மருத்துவர்கள், ஏனைய சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள். நூற்றுக்கணக்கான பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மசூதிகள், ஆலயங்கள் உள்ளிட்ட பண்பாடு, கல்வி, சமயம் போன்றவற்றுடன் தொடர்புபட்ட இடங்களை அழித்தல், இவ்வாறான செயற்பாடுகள் அனைத்துமே இனவழிப்புச் செயற்பாடுகள் தான் என்பதை தென் ஆபிரிக்க அரசின் சட்டக்குழு மிகவும் தெளிவாக எடுத்துவைத்தது.



இனவழிப்புக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் போது, அங்கே இனவழிப்பு நோக்கம் இருக்கிறது என்பதை நிரூபிப்பது மிகவும் கடினமானது. ஒரு தேசிய, இனத்துவ, அல்லது ஒரு மதம் சார்ந்த குழுவை முழுமையாகவோ அன்றேல் பகுதியாகவோ அழிக்கும் நோக்கம் அங்கு இருக்கிறது என்பதைக் குற்றஞ்சாட்டுவோர் நிரூபித்தாகவேண்டும். இவ்வாறே இனவழிப்பை தவிர்த்தல் மற்றும் தண்டித்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனம் குறிப்பிடுகின்றது. ஆனால் இஸ்ரேலின் விடயத்தைப் பொறுத்த வரையில், தென் ஆபிரிக்கச் சட்டக்குழு சுட்டிக்காட்டியிருப்பது போன்று, இவ்விடயம் தொடர்பாகப் பெருமளவான சான்றுகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

2023ம் ஆண்டு ஒக்ரோபர் 7ம் திகதியில் இருந்து, பாலஸ்தீனமக்கள்மேல்ஒருஇனவழிப்பை மேற்கொள்ளுகின்ற, மற்றும் அவ்வாறான ஒரு இனவழிப்பைத் தூண்டும் தன்மையை உள்ளடக்கிய இஸ்ரேல் அரசின் 500 கூற்றுக்களை மிகவும் நுணுக்கமாகத் தொகுத்து, ஆவணமாக்கிய, புதியதும் அனைத்துக்கூற்றுக்களையும் உள்ளடக்கியதுமான ஒரு தரவுத்தளத்தை தங்களது விவாதத்துக்கு ஆதாரமாக தென் ஆபிரிக்க அரசு பயன்படுத்தியிருக்கிறது. உயர் அதிகாரத்தில் உள்ளோர், அரச தலைவர்கள், போருக்கென்று உருவாக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள், உயர் இராணுவ அதிகாரிகள், ஏனைய அரசியல்வாதிகள் இராணுவ அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், சமூகத்தில் முன்னிலை வகிப்போர் போன்றவர்களின் கூற்றுகள் மேற்குறிப்பிட்ட தரவுத்தளத்தில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இக்கூற்றுகள்அனைத்துமே காஸாவை இனவழிப்பைச் செய்வதில் இஸ்ரேல் எவ்வளவு முனைப்பாக இருந்திருக்கிறது என்பதை கோடிட்டுக் காட்டுகின்றன.



”பாலஸ்தீன மக்கள் மனிதர்களே இல்லை” என்ற பொருட்பட இஸ்ரேல் பிரமுகர்கள் பேசி வந்திருப்பது மட்டுமன்றி, காஸாவில் வாழும் மக்கள்அனைவரையுமேதமதுஎதிரிகளாகஅவர்கள் சித்தரித்திருக்கிறார்கள். தமது காலனீயக் குடியேற்ற அதிகாரத்தினால் பலப்படுத்தப்பட்டு, எழுபது ஆண்டுகளுக்கு மேலாக பாலஸ்தீன மக்களைக் கொல்வது, அங்கவீனர்களாக்குவது, அழிப்பது, இல்லிடங்களை விட்டு வெளியேற்றுவது, அவமானப்படுத்துவது, சிறைப்பிடிப்பது போன்ற செயற்பாடுகளில் இஸ்ரேல் அரசு ஈடுபட்டு வந்திருக்கிறது. இத்தனையையும் பொருள் ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் அமெரிக்கா அவர்களுக்கு கொடுத்து வருகின்ற ஆதரவுடன் அவர்கள் மேற்கொண்டு வருவது மட்டுமன்றி, இனவழிப்பு தொடர்பான தங்கள் நோக்கத்தை அவர்கள் எந்தவித கூச்சமும் இன்றி முன்னெடுத்துவருகின்றார்கள். இதற்கான காரணம் என்னவென்றால் தாம் காட்டுமிராண்டிகளையே தமது காலனீய அதிகாரத்துக்கு உட்படுத்தியதாக அவர்கள் கருதுகின்றார்கள்.

கடந்த வருடம் ஒக்ரோபர் 9ம் திகதி 'முழுமையான முற்றுகை' என்ற தனது பிரகடனத்தை வெளியிடும் போது, 'மனித மிருகங்கள்' என்று பாலஸ்தீனர்களை இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரான யோஆவ் கலன்ட் சித்தரிந்திருந்தது குறிப்பிடத்தக்கது. 'தீமையின் நகரம்' என்று ஒக்ரோபர் 7ம் திகதி காஸாவைச் வர்ணித்த பெஞ்சமின் நெத்தன்யாகு, மீண்டும் டிசம்பர் 24ம் திகதி, காஸாவுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதலை அரக்கர்களுக்கு எதிரான போராட்டம் எனவும் வர்ணனை செய்தார். ”இது காண்டுமிராண்டிகளுக்கு எதிரான இஸ்ரேலின் போராட்டம் மட்டுமல்ல மாறாக இது நாகரீகத்துக்கும் காட்டுமிராண்டித்தனத்துக்கும் எதிரான போராட்டம்” என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.



”உண்மையில், தீமையின் ஏகாதிபத்தியத்திலிருந்து மேற்குலக நாகரீகத்தைப் பாதுகாக்கவே காஸா மீது நாங்கள் போர் தொடுக்கிறோம்” என்று அதற்குச் சில நாட்களுக்கு முன்னர் டிசம்பர் 5ம் திகதி, இஸ்ரேலின் அதிபரான ஐசக் ஹேர்சொக் தெரிவித்திருந்தார்.

”மேற்குலக நாகரீகத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின் பாலஸ்தீனத்தின் காஸா முற்று முழுதாக அழிக்கப்படவேண்டும”; என்று நெத்தன்யாகுவும் ஏனைய மூத்த அமைச்சர்களும் தெட்டத்தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். விவிலியத்திலுள்ள அமலேக் என்ற மக்களுடன் காஸாவிலுள்ள மக்களை ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதாவது அவர்கள் அழிக்கப்படவேண்டிய எதிரிகள் என்பதே அதன் சாராம்சமாகும்.

மதத்தையும், ஜேர்மனியில் இஸ்ரேல் மக்கள் சந்தித்த படுகொலைகளையும் ஆயுதமாக்குவது இனவழிப்பு மனநிலையையே சுட்டிநிற்கிறது. தாங்கள் தாக்குதலை மேற்கொண்டு அழித்தொழிக்கும் குழுமத்தினர், தங்களது உயிர் வாழ்வுக்கு ஆபத்தை விளைவிப்பவர்கள் என்றே இனவழிப்பின் சூத்திரதாரிகள் அவர்களைப் பார்க்கிறார்கள். இவர்களது மனதில் இனவழிப்பு என்பது ஓர் அவசியமான பாதுகாப்பு என்பது அவர்களது பார்வையாக இருக்கிறது. இரண்டாம் உலகப் போரின் போது, இவ்வாறு தான் தங்களது இனவழிப்பு நியாயமானதும் தேவையானதுமான பாதுகாப்பு என்று நாஸிகள் கருதினார்கள். இவ்வாறே தான் பாலஸ்தீனர்கள் மேல் தாங்கள் மேற்கொள்ளும் இனவழிப்பை இஸ்ரேலியர்கள் பார்க்கிறார்கள்.

இஸ்ரேலின் இனவழிப்பைத் தூண்டுகின்ற சொல்லாடல்களின் முழுமையான ஆதாரத்தளத்தை பாலஸ்தீனத் தரவுத்தளத்துக்குரிய சட்டம் கொடுக்கிறது. இஸ்ரேலின் உயர் அதிகாரங்களில் உள்ளவர்கள் எந்தவித கூச்சமும் இல்லாமல் பயன்படுத்தும் இந்த இனவழிப்புப் பேச்சு, ”தென் ஆபிரிக்காவுக்கு ஆதரவாக தற்காலிக நடவடிக்கைகளைக் குறிப்பிடுகள் அல்லது

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இந்திய மாலைதீவு மோதல்

# இந்துசமுத்திர பிராந்தியத்தின் பிடியை இழக்கின்றதா இந்தியா

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

இந்திய படையினரை எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் நாளுக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறுமாறு மாலைதீவு கேட்டுள்ளது. மாலைதீவு அதிபர் மொகமட் மொய்சவின் பிரதான உதவியாளரான அப்துல்லா நசீம் இப்ராஹீம் இதனை ஞாயிற்றுக்கிழமை(14) தெரிவித்துள்ளார்.

எமது மண்ணில் இந்திய படையினர் இருக்க முடியாது, இது மாலைதீவு நிர்வாகத்தின் கொள்கை. என அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் இரு நாடுகளும் கடந்த சில மாதங்களாக பேச்சுக்களை மேற்கொண்டுவந்திருந்தன. மாலைதீவுக்கான இந்திய தூதுவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை(14) காலை மாலைதீவு அதிகாரிகளை சந்தித்தும் இருந்தார். ஆனால் அன்று மாலை மாலைதீவின் வெளிவிவகார அமைச்சகம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. அதாவது விரைவாக படையினரை வெளியேற்ற இந்தியா சம்மதித்துள்ளது.

அங்கு 77 இந்திய படையினர்தங்கியுள்ளனர் என மாலைதீவு அதிபர் தெரிவித்திருந்தார். ஆனால் 88 பேர் உள்ளதாக மாலைதீவு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. மலைதீவின் அவசர காலநிலையின் போது பயன்படுத்தவென இந்தியா வழங்கிய இரண்டு டொனியர் வகை விமானங்கள் மற்றும் உலங்குவானூர்திகளை இயக்குவதற்கு மற்றும் பாராமரிப்பதற்காக அவர்கள் அங்கு தங்கியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சீன சார்பு புதிய அரச தலைவர் கடந்த நவம்பர் மாதம் பதவியேற்றபோது இந்திய படையினரை வெளியேற்றப்போவதாக தெரிவித்திருந்தார். வெளிநாடுகளின் படைத்துறை தலையீடுகளைத் தவிர்ப்பதுடன், வர்த்தகத்தில் சம நிலையை பேணுவது, இந்தியாவின் அழுத்தங்களை குறைப்பது போன்றவை தனது நோக்கம் என அவர் தெரிவித்திருந்தார்.

முன்னைய அரச தலைவர் மொகமெட் சொகில் புதுடில்லியுடன் நெருங்கிய தொடர்புடையவர்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உயர்மட்ட கூட்டத்தை இந்தியா உறுதிப்படுத்திய போதும் அது தொடர்பான தகவல்களை தெரிவிக்க இந்தியா மறுத்துவிட்டது. மாலைதீவு அதிபர் சீனாவுக்கு முதலாவது பயணத்தை மேற்கொண்டபோது இலட்சம்தீவுக்கு பயணத்தை மேற்கொண்டு மாலைதீவின் சுற்றுலாத்துறைக்கு பொருளாதார பின்னடைவை மேற்கொள்ள இந்திய பிரதமது நரேந்திரமோடி எடுத்த நடவடிக்கை மாலைதீவுக்கு கடும் நெருக்கடிகளை கொடுத்திருந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் மாலைதீவின் அதிகாரிகள்மற்றும்அரசியல்வாதிகள்சமூகவலைத் தளங்களில் பதிவிட்ட கருத்துக்கள் இரு நாடுகளுக்குமிடையில் இரஜதந்திர விரிசல்களை தோற்றுவித்திருந்தது. அதனை தொடர்ந்து இந்தியர்கள் மாலைதீவுக்கான சுற்றுலாத்துறையை முடக்குவதற்கான பிராச்சாரங்களில் ஈடுபட்டிருந்தனர். விடுதிகளுக்கான 8,000 ஆரம்ப முன்பதிவுகள் இரத்துச்செய்யப்பட்டன, 2,500 இற்கு மேற்பட்ட விமான பயணங்களுக்கான பயணச்சீட்டுக்களும் இரத்துச்செய்யப்பட்டன.

மலைதீவு அரச தலைவர் அலுவலகம், வெளிவிவகார செயலகம், சுற்றுலாத்துறை அலுவலகம் ஆகியவற்றின் இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அது இந்தியாவில் இருந்தே மேற்கொள்ளப்பட்டதாக மாலைதீவு குற்றம் சுமத்தியிருந்தது.



மாலைதீவின் சுற்றுலாத்துறையை பொறுத்தவரையில் கடந்த ஆண்டு 1.4 மில்லியன் பயணிகளை அது கவர்ந்திருந்தது. பயணிகளின் எண்ணிக்கையில் ரஸ்யா முதலாவது இடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளன. இந்தியா 3 ஆவது இடத்தில் உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூகவலைத்தளங்களில் கருத்துக்களை பதிவிட்ட மாலைதீவின் 3 பிரதி அமைச்சர்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தனர். அதன் பின்னர் மாலைதீவுஅதிபர் சீனாவுக்கு சென்றிருந்தார்.

ஆனால் அங்கு அவருக்கு அமோக வரவேற்பளித்த சீனா 130 மில்லியன் டொலர்கள் உதவியையும் வழங்கியதுடன், உட்கட்டுமானம், விவசாயம் உட்பட பல அபிவிருத்தி திட்ட உடன்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது. சீனா மாலைதீவின் மிக நெருக்கிய நண்பன் எனவும், அரிசி, கோதுமை, சீனி போன்ற உணவுப் பொருட்களின் இறக்குமதியில் ஒரு நாட்டை சார்ந்திருக்க தான் விரும்பவில்லை எனவும் மொய்சு அங்கு பேசும்போது தெரிவித்திருந்தார். தற்போது இந்த உணவுப்பொருட்களை மாலைதீவு இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்கின்றது.

அதாவது இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இந்த பொருட்களை அவர் தற்போது சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளது இதன் மூலம் தெரியவந்துள்ளது. மேலும் மாலைதீவின் பொருளாதார வளர்ச்சியில் சீனாவின் பங்களிப்பு முக்கியமானது எனவும், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தமக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் எனவும் மாலைதீவு அதிபர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கு சீனா 1.37 பில்லியன் டொலர்களையும், சவுதி அரேபியா 124 மில்லியன் டொலர்களையும் மற்றும் இந்தியா 123 மில்லியன் டொலர்களையும் கடனாக வழங்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.



நாம் சிறிய நாடாக இருக்கலாம் ஆனால் அதற்காக எம்மீது அழுத்தங்களை யாரும் திணிக்க முடியாது, நாம் ஒரு இறைமையுள்ள தேசம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். இதனிடையே, இது தொடர்பில் கருத்து தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர், அரசியல் என்பது அரசியல் தான் அதில் எல்லா நாடும் எப்போதும் இந்தியாவை ஆதரிக்கும் என எதிர்பார்க்க முடியாது என தெரிவித்திருந்தார்.




பங்களாதேசத்தில் இடம்பெற்ற தேர்தலில் சீன சார்பு ஹசீனா அரசு வெற்றிபெற்றதும், தாய்வானில் இடம்பெற்ற தேர்தலில் அமெரிக்க சார்பு அரசு ஆட்சி அமைத்ததும், மாலைதீவின் நிலைப்பாடும் இந்துசமுத்திர பிராந்தியத்தின் பூகோளஅரசியல் நெருக்கடிகளை மேலும் அதிகரித்துள்ளது. தற்போது உருவாகியுள்ள பாக்கிஸ்தான் - ஈரான் முறுகல் நிலையும் ஆசிய

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

### முன்னாள் ஜனா ... தொடர்ச்சி ...

ராஜபக்ச சட்டத்தை மீறி பொதுமன்னிப்பு வழங்கினார்” என உச்ச மன்றம் தீர்ப்பு வழங்கும் வகையில் அரசியல் சவால்களை எதிர்கொண்டு வழக்கு தொடர்பில் நீதிமன்றில் முன் நின்ற சட்டத்தரணிகள் பாராட்டப்பட வேண்டியவர்களே.இத் தீர்ப்போடு அவர்களின் கடமை முடிந்துவிடவில்லை என்பதையும் கூறுவதோடு சட்டத்தை மீறியமைக்கு உச்சபட்ச தண்டனையை பெற்றுக் கொடுத்தால் மட்டுமே தீர்ப்பு முழுமையடையும். இது ஏனைய ஜனாதிபதிகளுக்கும் சட்டம் தொடர்பிலும், சட்டத்தரணிகள் தொடர்பிலும் அச்சத்தை ஏற்படுத்தும். நல்லாட்சி தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும்.

மிருசுவில் சமூகப் படுகொலையோடு தொடர்பட்டு மரண கைதியாகி தண்டனை கைதியாக சிறையில் இருந்த ஆழ ஊடுருவும் படையணியை சேர்ந்த சுனில் ரத்னாயக்கா 2020 ஆம் ஆண்டு இதே ஜனாதிபதியால் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார். இது நீதிமன்றத்தையும், சட்டத்தையும், சமூக நீதியையும் அவமதிக்கும் செயலாகும். இது இனம் சார்ந்து, இராணுவம் சார்ந்து எடுத்த முடிவாகும். இத்தகைய சமூக படுகொலையாளி பொதுமனிப்பின் கீழ் விடுதலை செய்தமையை இனவாத சமூகம் அங்கீகரித்து.இதன் மூலம் கோத்தாபயவின் தமிழர்களுக்கு எதிரான கோரமுகமும் சட்டத்தை அவமதிக்கும் அகோரமும் வெளிப்பட்டது.

நாடு முழுவதும் 24 கும் அதிகமான சமூக புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானோர் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நீதி கிட்டமைக்கும் அதிகார தரப்பும் அதிகாரமே காரணமாகும். இத்தகைய அதிகாரம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சாபக்கேடு என்பதை தற்போது மக்கள் உணர்வார்கள்.

ஜனநாயக நாட்டில் நீதித்துறை, நாடாளுமன்றம், நிறைவேற்ற துறை என்பன சயாதீனமாக இயங்க வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பு.துமிந்த சில்வா தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அன்றைய நீதிமன்றத் துறையும் சுயமாக இயங்கவில்லையோ? எனக் கேள்வியை கேட்க தூண்டி உள்ளது.

மேலும் அதிகார துஷ்பிரயோகம் செய்து அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகளுக்கும், ஊழல் அரசியல்வாதிகளுக்கும், நாட்டை பொருளாதார நிலையில் படுபாதாழத்திற்கு இட்டு சென்றவர்களுக்கும் மக்கள் நீதிமன்றமான தேர்தல் மூலம் தம்முடைய தீர்ப்பை வழங்க வேண்டும். தேர்தல் அதிகார துஷ்பிரயோகத்திற்கும், ஊழலுக்கும் உட்படாதிருந்தால் மட்டுமே அது நிகழும். நீதிமன்ற தீர்ப்பு மக்களை விழிப்படைய செய்யும் என எதிர்பார்ப்போம்.

### மார்ச் ஜெனிவா... தொடர்ச்சி ...

செல்லவுள் ளார். 19ஆவது அணிசேரா மாநாட் டுக்காக 120 நாடுகளின் தலைவர்கள் உகண்டாவில் கூடியுள்ளனர். இந்த மாநாட்டைப் பயன்படுத்தி ஆபிரிக்க தலைவர்கள் உட்பட பல தலைவர்களுடன் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் ஒத்துழைப்பு உட்பட பல்வேறுவிடயங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

மார்ச் மாத அமர்வில் இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடர்பாக பொறுப்புக் கூறும் திட்டத்தை முன்வைத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதித் தீர்மானத்தை இலங்கை நிராகரித்துள்ளது. இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைக்கும் நாடுகளில் பிரதானமானதாக பிரிட்டனுடன் இலங்கை ஜெனிவா அமர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செங்கடலில் ஹௌத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கப்பல்களை அனுப்புவதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் விடுத்த வேண்டுகோள்களை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள விடயமறிந்த வட்டாரங்கள், ஜெனிவா அமர்விற்கு முன்னர் இந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காகவே ஜனாதிபதி கப்பலை அனுப்ப இணங்கினார் என தெரிவித்துள்ளன.

### இந்திய மாணவ ... தொடர்ச்சி ...

அதனை மறுத்திருந்தது. இதனை தொடர்ந்து இரு நாடுகளும் தூதுவர்களை அவர்களின் நாடுகளில் இருந்து வெளியேற் றியருந்தன.

புதுடில்லி 41 கனேடிய இராஜதந்திரிகளை வெளியேற்றியிருந்தது. அவர்களின் வெளியேற்றம் என்பது மாணவர்களுக்கான நுளைவு அனுமதியை வழங்குவதில் அதிகாரிகளின் பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்தது. அது தற்போது மாணவர்களின் கல்வியை பாதித்துள்ளதாக த றொய்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

### தமிழ் தேசிய ... தொடர்ச்சி ...

யான் ஆதரவாளர்களும் தமிழ் தேசியத்திற்கு எதிரான சக்திகளும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இளம் சந்ததியினர் மத்தியில் தமிழ் தேசியம் தொடர்பான பிழையான பிம்பங்களை ஏற்படுத்தி அவர்களை தமிழ் தேசிய பாதையிலிருந்து விலகச்செய்து தமது பிரித்தாளும் தந்திரம் மூலம் தங்களை பலப்படுத்த நினைக்கும் அரசுக்கு ஆதரவான சக்திகளுக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்பாட்டினை இலங்கை தமிழரசுக்கட்சியும் அதன் ஆதரவாளர்களும் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

கிழக்கில் இன்று தமிழர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுவருகின்றனர்.மயிலத்தமடு,மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் 127 நாட்களையும் தாண்டிய நிலையில் போராடிவரும் நிலையில் ஒரு தமிழ் தேசிய நிலைப்பாடுகளைக்கொண்ட கட்சியில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் நாளை இந்த மாகாணத்தில் தமிழர்களுக்கு காணப்படும் பிரச்சினைகளைசிங்களஅரசுமூடிமறைப்பதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

எனவே இன்றைய யதார்த்த நிலைமையினை உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும். தமிழர்கள் கட்சி அரசியலை நிராக்கரிக் கும் நிலைமை காணப்படுவதன் காரணமாக தமிழ் தேசிய அரசியலை முன்கொண்டுசெல்ல முன்வரவேண்டும். எதிர்காலத்தில் கிழக்கினை பாதுகாப்பதற்கான தமிழ் தேசிய அரசியல் வலுவாக்கப்படவேண்டுதே தவிர பலவீனப்படுத்தப்படக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

• • •

### இந்திய மாலை... தொடர்ச்சி ...

அரபு பிராந்தியங்களில் ஒரு உறுதித்தன்மையை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் இந்த வருடம் இடம் பெறவுள்ள இலங்கையின் தேர்தல் இந்தியாவுக்கு முக்கியமானதாக கருதப்படுகின்றது. எனவே தான் இந்தியா தற்போது இலங்கையை நோக்கி அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் செறிந்துவாழும் வடக்கு கிழக்கு நோக்கி தனது கவனத்தை செலுத்த ஆரம்பித்துள்ளது.

• • •

### வெள்ள அனர்த்த ... தொடர்ச்சி ...

கோளுக்கிணங்க தம்பலகாமம் பிரதேச சபை (JCB) மற்றும் பொது மக்கள் இணைந்து சிரமதான அடிப்படையில் வடிகான்கள் சுத்தம் செய்யப்பட்டது.

இதன் போது கலந்து கொண்ட மக்களுக்கான அரிசி பொதிகள் வன்னி ஹோப் நிறுவனத்தினால் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் குறித்த கிராம சேவகர் பிரிவின் கிராம சேவகர்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

### தமிழரசு தலை... தொடர்ச்சி ...

போராட்டங்களுக்கு ஒற்றுமையாக வருகிறோம் என கூறிக்கொண்டு எண்ணிக்கையை கூட்டி காட்டுவது மட்டும் ஒற்றுமை அல்ல.

ஒரு தேசத்தை நிர்மாணிப்பதற்காக அந்த மக்களின் விடுதலைக்காக அந்த மக்களை முன்னோக்கி நகர்த்துவதற்காக சிந்திக்க வைப்பதாக இருக்க வேண்டும் என்பதுமிக முக்கியமானது.

• • •

### செங்கடல் பதற்ற ... தொடர்ச்சி ...

6 தொடக்கம் 10 கடற்படை கப்பல்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தியாவின் 14 பில்லியன் டொலர் வர்த்தகம் செங்கடல் பகுதியின் ஊடாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. தற்போது ஒரு சாதாரண கொள்கலனுக்கு 600 டொலர்கள் செலவாகின்றது. செங்கடலை தவிர்த்து தென்னாபிரிக்கா ஊடாக செல்வதானால் 1500 டொலர்கள் செலவாகும் என இந்தியா கவலை அடைந்துள்ளது.

### வலுக்கும் பாக்கி ... தொடர்ச்சி ...

சிக்னல்களை குழப்பும் நடவடிக்கையில் ஈடபட்டதாக பாகிஸ்தான் வான்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈரான் கந்தவாரம் ஈராக், சிரியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புக்களின் முகாம்களை தாக்கியிருந்துது. எனினும் பாகிஸ்தான் அதற்கு கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டதுடன், ஈரானின் தாக்குதல் தனது இறைமையை மீறும் செயல் என தெரிவித்து தனது தூதுவரையும் ஈரானில் இரந்து மீள அழைத்திருந்தது.

இரு நாடுகளின் மிக நெருங்கிய நட்பு நாடான சீனா இரு நாடுகளையும் பொறுமை காக்கும் படி கேட்டுக்கொண்டிருந்தது.

ஈரான் மேற்கொண்ட தாக்குதலில் இரு சிறுவர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்திருந்தது. பாகிஸ்தான் மேற்கொண்ட தாக்குதலில் 3 பெண்களும், 4 சிறுவர்களும் கொல்லப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

### செங்கட லில் ... தொடர்ச்சி ...

தொலைவில் வைத்து தாக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் கிறீஸ் நாட்டு கப்பல் தாக்கப் பட்டிருந்தது. இரண்டு கப்பல்களும் சேதங்களை சந்தித்தபோதும் பணியாளர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என தெரிவிக் கப்படுகின்றது. இதனை தொடர்ந்து செவ்வாய்க் கிழமை(16) அமெரிக்கா மீண்டும் குர்திகளின் ஏவுதங்கங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

ஆனால் அதன் பின்னர் புதன்கிழமை மீண்டும் அமெரிக்க கப்பல் தாக்கப்பட்டுள்ளது.

**தமிழர் வள ... தொடர்ச்சி ...**

இந்நிகழ்வைத் தொடர்ந்து விருந்தினர் ஒருவரின் உரை இடம்பெற்றது. இதுவே இந்நாள் வருகை தந்து சிறப்பித்தவர்களின் உரைகளில் நிறைவானதாக அமைந்தது.

மீன்பாடும் தேன் நாடாம் மட்டுநகரிலே ஆரையம்பதி என்னும் ஊரில் பிறந்த அன்னை பூபதி அவர்கள் இந்தியப்படைகள் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் வன்முறையில் இறங்கியது. அப்போது இந்தியப் படை உடனடியாகப் போரை நிறுத்தி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி அன்னை பூபதி அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து தன் இன்னுயிரை ஈகம் செய்து நாட்டுப்பற்றாளர் என்ற பெயரையும் பெற்றார். அவரின் நினைவாக அவரின் பெயரில் நோர்வேயில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் கிளைபரப்பி பெருவிருட்சமாக வளர்ந்துநிற்கின்றது. இந்தக் கருப்பொருளுக்கு வலிமை சேர்க்கும் வகையில் தொய்யன் வளாக மாணவர்கள் மிகச் சுவாரசியமான வில்லுப்பாட்டொன்றை வழங்கியிருந்தார்கள். தொடர்ந்து லோறன்ஸ்கூக் வளாக கலை வகுப்பு மாணவர்களின் நடன நிகழ்வு இடம்பெற்றது.

### உழவன் தாத்தா வருகை

வாழும் நாட்டில் உள்ள பண்பாட்டு விழுமியங்களையும் உள்வாங்கி நத்தார் தாத்தாவின் வருகை போன்று, உழவன் தாத்தாவின் வருகை பலரது கவனத்தையும் ஈர்த்தது. முதுமை முதிர்ந்த தாத்தா தனது தோள்களில் ஏருடன் வர அவரை தொடர்ந்து கரும்புகளை ஏந்தியபடி இருவர் வலம் வர, குதிரை ஆட்டத்துடனும் காவடியாட்டம் எடுத்து வந்து ஆடி நின்ற அழகு இன்றும் கண்களில் முன் நிழலாடுகிறது.

### இடைவேளை

இடைவேளையின் போது அங்கு வந்திருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் வயிறார விருந்தளித்த நிகழ்வு இடம் பெற்றது. விருந்தில் பொங்கல் உட்பட மதிய உணவு வடையுடன் வழங்கப்பட்டு நீராகாரமும் வழங்கப்பட்டது. வந்திருந்த மக்கள் மத்தியில் தைப்பொங்கல் விழாவில் உணவின் நிறைவை காணக்கூடியதாக இருந்தது.

### கோலாட்டம்

தமிழர் ஆடற்கலையின் மிகத் தொன்மையான வடிவமாக இருப்பது கூத்து. பலவகையான கதைக்களங்களைக் கொண்ட கூத்துகளை பல்வேறு இசை வடிவங்களில் எமது முன்னோர் ஆடி மகிழ்ந்ததோடு தலைமுறை தலைமுறையாக அவற்றைப் பேணியும் வந்துள்ளனர். அவ்வாறு ஆட்டப்பட்ட கூத்துகளில் ஒன்றுதான் சத்தியவான் சாவித்திரி. அறிவாற்றல் மிக்க சாவித்திரி எனும் அரசி தனது வாதத்திறமையால் காலனிடமிருந்து தனது கணவன் உயிரை மீட்டு, அவனது பெற்றோரிடம் ஒப்படைப்பதோடு, இழந்துபோன அவர்களது அரசுரிமையையும் நாட்டையும் மீட்டுத்தரும் வரலாற்றைக் கூறுவதாக இக்கூத்து அமைக்கப்பட்டிருக்கும். ஒரு பெண்ணை மையப்படுத்தி, அவளது வாழ்க்கை வரலாற்றை



சுவைபடக் கூறும் இக்கூத்து முன்னிரவில் தொடங்கி விடியும் வரை ஆடப்படும். காலச்சூழல் கருதி அக்கூத்தின் முதன்மைக் காட்சியான வாதாடல் பகுதியை மட்டும் காலனை வென்ற காரிகை எனப் பெயர் சூட்டி, அன்றைய பொங்கல் விழாவில் அரங்கேற்றிக் காட்டி உள்ளனர். இன்றைய தொழில்நுட்பக் காலத்தில் அருகிவரும் எமது கூத்துக்கலையின் இருப்பை உறுதி செய்யவும் அதன் காத்திரத்தன்மையை எமது அடுத்த தலைமுறையினர் புரிந்துகொள்ளவும் ஏதுவாக இக்கூத்தை இந்த தமிழர் திருநாளில் அரங்கேற்றியுள்ளார்கள் லோறன்ஸ்கூக் வளாக மாணவர்கள்.



மொட்டன்ஸ்ரூட் வளாக மாணவர்கள் தாளலயத்தினூடாக புலம்பெயர்ந்து வாழும் எம்மவர் குடும்பங்களில் அன்றாடம் நிகழும் நிகழ்வுகளை புடம்போட்டுக்காட்டினார்கள். நேரமில்லை என்ற தலைப்பிலமைந்த இத்தாயலயம் எம் சிறார்களின் மனநிலையையும் நாளாந்த வாழ்க்கையில் எமது நிலைப்பாட்டையும் எடுத்துக்கூறி எம் அனைவரையும் சிந்திக்க வைத்தது.

அஸ்கர் பாரும் வளாக மாணவர்கள் தமிழ் மரபுச்சின்னங்களையும், இத்தாலி நாட்டு கடற்பயணியான மார்க்கோபோலோ ஈழத்திற்கு வந்தபோது ஈழத்தில் கண்டவற்றை பதிவுசெய்த விடயங்களையும் நாடகத்தினூடாக எமக்கு நினைவூட்டினார்கள்.

றொம்மன் வளாக 12ம் வகுப்புகள் மாணவர்கள் முன்னை மொழிகளிலே மூத்த மொழியான செந்தமிழே எங்கள் தாய்மொழி என்ற பெருமைக்குரிய இனமான தமிழினமே தானைத்தலைவனைத் தான்பெற்ற தமிழினமே! எழுக! என்று முழங்கிய 'எழுக தமிழ்'' என்ற கவிதா நிகழ்வு சபையில் இருந்த அனைவரையும் கட்டிப்போட்டது.

### அறிவு முற்றம்

தமிழ் மொழியை கற்று வரும் இளையவர்களின் திறனை வெளிப்படுத்தும் முகமாக அறிவுக்கு விருந்தாக அறிவு முற்றம் போட்டி நிகழ்வுகள், தைப்பொங்கல் விழாவில் பார்வையாளர் பலரின் கைதட்டல்களுடன் ஆரவாரமாக நிகழ்த்தப்பட்டது. குறிப்பாக நோர்வேயில் பிறந்து வளர்ந்து வரும் மாணவர்களுக்கு இடையில் வளாக ரீதியாக இடம்பெறும் இப்போட்டியானது மிகவும் அலாதியானது. இப்ப போட்டியை வழிநடாத்திய தொகுப்பாளர்கள் நோர்வேயில் பிறந்து வளர்ந்து அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடத்தில் கல்வி கற்று இன்று இளம் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது. மிகக் குறைந்த வினாடித் துளிகளுக்குள் பல கேள்விகளுக்கு பதில் அளித்த மாணவர்களின் கல்வித் திறனை எண்ணி அன்னை பூபதி தமிழ் கலைக்கூடம் நிச்சயமாக பெருமைப்பட்டுக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

தைத்திருநாளில் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களும் விழுமியங்களும் பல்லாயிரம் மைல்கள் கடந்து வந்தும் பேணப்படுவது பல பெற்றோர்களை மகிழ்வடைய வைத்திருக்கும் என்பது திண்ணம். தமிழ்மொழியும் கலையும் பண்பாடும் வரலாறும் அடையாளங்களும் சிதைக்கப்படாது எமது அடுத்த பரம்பரைக்கு நகர்த்தப்பட வேண்டும் என்பதும் இங்கு அடையாளப்படுத்தப்பட்டது. இங்கு உழைத்து வரும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களது முழு அர்ப்பணிப்பை நல்கி வருவதை அனைவரும் பார்த்து மகிழ்ந்தார்கள். இன்று புலம்பெயர்ந்து வாழும் சூழலில் பல்வேறு கலாச்சார வட்டத்தில் அமைந்தாலும், எமது பண்பாடுகளையும் அடையாளங்களையும் நீர்த்துப்போகச் செய்யாது அதை வளர்த்தெடுக்கும் பணிகளை எமது கலைக்கூடம் முன்னெடுப்பது அவசியமானது.

எமது பாரம்பரிய உடைகள் பழக்க வழக்கங்கள் என்பன இந்நிகழ்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக புலம்பெயர் நாட்டில் பிறந்து வளர்ந்து வரும் இளையோர்களின் வளர்ச்சியில் பல பெற்றோர்கள் அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூட வளாகங்களுடன் இணைந்து பணியாற்றுவது பெருமைக்குரியது. முதன்மையாக பெற்றோர்கள் தமிழ் ஆர்வத்தை வளர்க்கும் நற்பணியை மிக நாட்டத்துடன் தொடர்ந்து செய்து வருவது சிறப்பாகும். நோர்வேயில் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், பல்வேறு வகையிலும் தமிழ்ப்பற்று அதிகரித்து இருப்பதற்கு இந்தக் கல்விக்கூடம் ஒரு முக்கிய பங்களிப்பினைச் செய்து வருகின்றது என்றால் அது மிகையாகாது. அன்னை பூபதி தமிழ் கலைக்கூடம் என்னும் நிறுவனம் இன்று கண்டிருக்கும் வளர்ச்சிக்கு பின்னால் இருக்கும் உழைப்பு கனதியானது. பல்லாயிரம் மாணவர்களுடன் பலநூறு ஆசிரியர்கள் நிர்வாகிகள் தமிழ் ஆர்வலர்கள் என பலரின் கடின உழைப்பே இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

அறிவியல் மாத்திரம் இன்றி பழக்க வழக்கங்களும் எமது இளையோர் மட்டத்தில் தமிழ்ப்பற்றுடனும் சொந்த நாட்டுப்பற்றுடனும் இணைந்து வருவதைக் காணலாம். எனவே தமிழ்ப் பாடசாலைகள் கல்வியியலில் மாத்திரமின்றி பண்பாட்டு மூலங்களையும் உள்வாங்கி உயர்த்தி வருகிறது. எந்தக் கலாச்சாரச் சூழலில் இருந்தாலும் எமது பண்பாட்டையும் கைவிடக்கூடாது என்பதில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மிகக் கவனம் எடுப்பதால்தான் இன்றும் தமிழ் வேரூன்றுகின்றது. தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் அனைவரின் பணி தொடர வாழ்த்துகள்.

**தமிழ் எங்கள் அடையாளம்**

**இனவழிப்பின் ... தொடர்ச்சி ...**

பன்னாட்டுச் சட்டத்தைத் தூக்கி வீசுங்கள்" என்று பன்னாட்டு சட்டநிபுணர் மோஷென் அல் அட்டார் குறிப்பிட்டது போன்று நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் ஒரு மிகவும் கடினமான தெரிவை மேற்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறது.

நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் தனது கடமையைச் சரிவரச் செய்து, தென் ஆபிரிக்காவின் கோரிக்கைக்கு ஆதரவாக முடிவெடுக்குமா இல்லையா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இது எவ்வாறிருப்பினும், இஸ்ரேல் மேற்கொள்ளும் வெளிப்படையான இனவழிப்புப் பேச்சும், முன்னெப்போதும் இல்லாத வகையில் காஸா மீது அது மேற்கொள்ளும் தாக்குதல்களும் பன்னாட்டுச் சட்டக்கட்டமைப்பில் இஸ்ரேலின் தண்டனையற்ற தன்மைக்கு ஒரு முடிவைக் கொண்டுவரவேண்டும். அத்துடன், வன்முறையை நிறுத்தி, காஸாவிலுள்ள பாலஸ்தீனர்களைப் பாதுகாத்து, இஸ்ரேலின் குடியேற்றக் காலனீயத்துக்கு ஒரு முடிவுரையும் எழுதப் படவேண்டும்.

நன்றி: அல்ஜஸீரா